Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசப் பிரதி

THAMPI
links with
LIONAIR
Tickets Available For
RS. 1999/-
T.P. - Colombo - 01-343125
Jaffna - 021-2222040 / 2823 / 2504
Hotline - 0777-382343, 072-401423

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 25 ஆம் நாள் (11.10.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 11





நேற்றைய பெண்கள் எழுச்சி விழாவில் மகளிர் படையணியைச் சேர்ந்த போராளிகள் அணிவகுத்து நிற்பதையும், அணிவகுப்பை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல விதுஷாவும், ஏனைய மகளிர் படையணிகளின் தளபதிகளும் ஏற்றுக்கொள்வதையும, புலிகளின் மூத்த தளபதிகள் நிகழ்வைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# பல்லாயிரம் மக்கள் மத்தியில் மகளிர் படையணி வீறுநடை!

## கிளிநொச்சியில் எழுச்சிமிகு நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

**தமிழீழ மகளிர் எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்றுக் கிளிநொச்சியில் மிக எழுச்சியுடன் நடந்தேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள - மகளிர் படையணிகளின் அணிவகுப்பு, போர் ஒத்திகை, கலை நிகழ்ச்சிகள், ஒலிப் பேழை வெளியீடு என்பன சிறப்புற நடைபெற்றன.**

நேற்றைய மகளிர் எழுச்சி நிகழ்வின்போது - மகளிர் படையணிகளின் அணி வகுப்புகள் மற்றும் தமிழீழ போராட்டத்தின் தடம்பதித்த முக்கிய அம்சங்களையும் அரசியல், இராணுவ பரிமாணங்களைச் சித்திரிக்கும் வகையிலான ஊர்திப் பவனிகளும் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட மன்னகுளத் தாக்குதலை நினைவுகூரும் வகையிலான மாதிரி தாக்குதல் நிகழ்வு மற்றும் கலைநிகழ்ச்சிகளும் என ஒருங்கிணைந்த வகையில் நடைபெற்றதனால் மேற்படிநிகழ்வு மிக எழுச்சிபூர்வமாக

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே உயர்மட்டக் குழு யாழ்ப்பாணம் வருகின்றது

நோர்வே துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடன் மேலும நான்குபேர் அடங்கிய உயர்மட்டத் தூதுக்குழு எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கிறது.

அன்றைய தினம் காலை அம்பாந்தோட்டையிலிருந்து தமது விமானப் பயணத்தை ஆரம்பிக்கும் இத்தூதுக் குழு காலை 10 மணியளவில் பலாலி விமான நிலையத்தை வந்தடையும். உடனேயே அங்கிருந்து புறப்படும் இக்குழுவினர் காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்தின் பிரமுகர்கள், உயரதிகாரிகளுடன் ஒருமணிநேரக

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோக்கம் நிறைவேறும்வரை நாம் பலமாக இருப்போம்!

### கடற்புலிகளின் தளபதி சூசை

(கிளிநொச்சி)

தன்னாட்சி, தாயகம், தேசியம் ஆகிய மூன்று நோக்கங்களுக்காகவே நாம் போராட்டம் நடத்துகின்றோம். இம்மூன்றும் கிடைக்கும்வரை



எமது படையணிகள் பலமாக இருக்கவேண்டுமென விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிறப்புத் தளபதி கேணல் சூசை-தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார்.

நேற்று மாலை கிளிநொச்சி விளையாட்டுத் திடலில் நடந்த மாபெரும் எழுச்சி நாள் நிகழ்வுக்குச் செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி தலைமைதாங்கினார்.

இந்நிகழ்வில் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன் ஆகியோரும் உரையாற்றினர்.

## அம்பாறை சம்பவத்தைக் கண்டித்து

## நாளை வட - கிழக்கில் துக்கதினம்; விடுதலைப் புலிகள் வேண்டுகோள்!

(கிளிநொச்சி)

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் அப்பாவித் தமிழ மக்கள்மீது மிகவும் கொடூரமான முறையில் சரமாரியாகச் சுட்டதில் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டும், முப்பதிற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் உள்ளான சம்பவமானது மிகவும் மோசமானதும், வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதுமாகும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட காலப் பகுதியில் இருந்து அமைதியான ஒரு புறச்சூழலிலே நிம்மதியான சுதந்திரமான வாழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வடக்குக் கிழக்கிலே வாழ்கின்ற மக்களுக்கு அம்பாறையில் சிறிலங்கா விசேட

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே குழு பாலாவை வன்னியில் சந்திக்கும்!

(கொழும்பு)

எதிர்வரும் புதன்கிழமை பதினாறாம் திகதி மாலையில் நோர்வே துணை வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான தூதுக்குழு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை வன்னியில் சந்தித்துப் பேச்சுகளில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பேச்சுக்களில் சமாதான நடவடிக்கைகளின் அடுத்தகட்ட நகர்வுகள் பற்றி ஆராயப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பகிறது.

இதேவேளை - அன்ரன் பாலசிங்கம் இன்னும் ஓரிரு தினங்களில் வன்னிக்கு வந்து சேருவார் என நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

### நோர்வே தூதரக செயலாளர் யாழ்.வந்து சேர்ந்தார்

எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள நோர்வே துணை வெளியுறவு அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவின் நிகழ்ச்சி நிரல் ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஒட்லர் லெயிக்றிட் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

### விண்ணாணம் விநாசியர்



பலத்தைத்தான் உலகம் மதிக்கும்,
அப்பதான் சமாதானமும் உதிக்கும்.

## முகாம்களுள் அதிரடிப்படை முடக்கம்; சுயாதீன விசாரணைக்குழு அமையும்!

### பிரதமர் ரணில் அறிவிப்பு

(நமது நிருபர்)

அம்பாறையில் மீண்டும் அமைதி திரும்பும்வரை விசேட அதிரடிப் படையினர் முகாம்களுக்குள் முடக்கப்படுவார்கள் என்றும், படுகொலைச் சம்பவம் பற்றி விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காஞ்சிரங்குடா படுகொலைகள் தொடர்பாக தம்மைச் சந்தித்த கூட்டமைப்பு பாரளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், வெள்ளிமலை, சந்திரநேரு, ரவிராஜ் ஆகியோரிடம் அவர் இதனைக் கூறினார்.

இச்சந்திப்பில் - குறிப்பிட்ட அதிரடிப்படை முகாமை உடனடியாக அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு சந்திரநேரு ரணிலிடம் கோரினார்.

இதற்கு பதிலளித்த ரணில் - நேற்றுமுன்தினம் நடந்த சம்பவம் தொடர்பான துரித விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவ அதிகாரிகளிடமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் அரசாங்கம் கேட்டுள்ளதாகவும்,

(10ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(நேற்றைய தொடர்ச்சி)

செல்வரத்தினம் செல்வரஞ்சினி (நீர்வேலி), இராஜேந்திரன் மச்சகாந்தி (கொக்குவில்), சிவதாசன் மயூரன் (கோண்டாவில்), குகதாசன் விக்னரூபன் (கொக்குவில்), டொமினிக் பற்றிக் அன்ரன் (யாழ்ப்பாணம்), உபேந்திரன் துஸ்யாந்தன் (சுன்னாகம்), இராஜதுரை இராஜவகிந்தன் (சுழிபுரம்), நடுனாயகமூர்த்தி இரதீபன் (சுழிபுரம்), இலகுபிள்ளை வாகீசன் (கோப்பாய்), மகேந்திரன் கோபிஸ்கண்ணா (இணுவில்), ஆறுமுகம் வரதராஜன் (பருத்தித்துறை), ஏரம்பமூர்த்தி சுதாஸ் (ஏழாலை), திரைமலைநாதன் பாலகுமார் (நல்லூர்), ரேணுகா கந்தசாமி (அச்சுவேலி), சிவலிங்கம் பிரதாபன் (கோப்பாய்), கதிர்காமத் தம்பி வரதசுந்தர் (புலோலி), மனோ கரன் வினோதகண்ணா (சுன்னாகம்), மார்க்கண்டு தயாநிதி (சாவகச்சேரி), சிவபாதம் யசோதினி (மல்லாகம்), பரமேஸ்வரநாதன் யசீலா (கோண்டாவில்), கணேசமூர்த்தி அனிதா (பருத்தித்துறை), இந்திராசா சர்மிலா (மல்லாகம்), நிர்த்திகா சரவணபவன் (கொக்குவில்), அனுஜா கிருஸ்ணதாஸ் (வல்வெட்டித்துறை), சபாரத்தினம் சர்மிலா (சுழிபுரம்), குலசிங்கம் பிரனாலினி (கோண்டாவில்), இரட்ணமாலினி இராஜரட்ணம் (சுழிபுரம்), சிவராஜா தேவராஜ் (இளவாலை), இலக்சுமணன் அபிராமி (பருத்தித்துறை), கலாரஞ்சினி கந்தசாமி (வல்வெட்டித்துறை), லோரன்ஸ் கிறிஸ்ரி நிலானி (ஆனைக்கோட்டை) சோபனா நாகராஜா (கொக்குவில்), கீதா ஜெயராயசிங்கம் (கோண்டாவில்), தம்பி லதா (அச்சுவேலி), நல்லசேகரம்பிள்ளை வித்தியா (பொகவத்தலாவை), தேவதாஸ் சுகிதா (வவுனியா), சரவாணந்தன் சஞ்சீவன் (வவுனியா), சரவணபவநந்தன் சத்தியபவனா (திருகோணமலை), லோரன்ஸ் ரமேஸ்குமார் (அம்பாறை), முகமட் சயித் அலி (நிந்தாவூர்-21), கமல ரஞ்சன் அமுதினி (திருகோணமலை), கந்தசாமி சுதர்சினி (திருகோணமலை), இராமையா யோகேஸ்வரன் (மஸ் கேலியா), நடராஜா கஜன் (தம்பிளிவில்-2), கோபால் கீர்தீபன் (கல்முனை), கோபாலகிருஷ்ணன் பிரபா (காரைதீவு-8), சண்முகராஜா சிவகௌசி (திருகோணமலை), புண்ணியமூர்த்தி சர்மிலா (அக்கரைப்பற்று), கோபாலகிருஷ்ணன் ஜெயக்குமார் (அக்கரைப்பற்று-7), உதுமாலெப்பை கிம்ரான் (அட்டாளைச்சேனை-4), வெற்றிவேல் சுதர்சினி (காரைதீவு-4), தம்பிப்பிள்ளை சிவராஜா (யாழ்ப்பாணம்)

### விவசாயம்

சிவஞானம் சிவபாலமுகுந்தன் (முள்ளியவளை) சுப்பிரமணியம் கயமதி (புதுக்குடியிருப்பு), நாகப்பிள்ளை அருந்தினி (யோகபுரம்),பாலசிங்கம் கமலராஜன் (முள்ளியவளை) குகதாசன் பார்த்தீபன் (யோகபுரம்), இலியானாட் குருஸ் இலின் மரியா (வங்காலை), நட்ராஜா ஜெயசுதா (ஒட்டிசுட்டான்), இஸ்மாய் சமின் உமீமா (சம்மாந்துறை), முகமட் கனிபா முகமட் சல்பிகார் (கெக்கரவா), அழகேஸ்வரி கணபதிப்பிள்ளை (காரைதீவு-5), சுப்பிரமணியம் சங்கீதராஜன் (மட்டக்களப்பு), பத்மநாதன் கமலப்பிரதீபா (மட்டக்களப்பு), நல்லதம்பி கோகிலவாணி (பளுகாமம்), அருள்ராஜா சுபோதினி (களுவாஞ்சிக்குடி), குணபாலா மஞ்சுளா (களுவாஞ்சிக்குடி), வேலுப்பிள்ளை விஜயபவா (காரைதீவு-7), தம்பிலெபி ருவாய்ஸ் (இறக்காமம்-3), கனகரத்தினம் வேர்யினியப்பிரசாந்தி (மட்டக்க்ளப்பு) தெய்வநாயகம் தவநாயகம் (களுவாஞ்சிக்குடி), ஜோன்பிள்ளை மேவின் (பெரிய கல்லாறு-3), தர்மரட்ணம் சுகந்தினி (களுதாவளை-2), சயினுள் அப்டீன் அப்துல் ஹகீம் (அக்கரைப்பற்று-6), தயாபரன் தர்மசீலன் (களுவாஞ்சிக்குடி), சின்னராஜா சிறிக்காந்தன் (பெரியபுரதீவு), சர்டீன் அப்துல் சலீம் (சாமாந்துறை-4), கந்தையா சிவமலர் (பெரியபுரதீவு), புகலேந்திரன் பிரசன்யா (குருமன்வேலி)-12), அதம்பாவா ரீசானா (மருதமுனை-3) ஆனந்தராசா தனுஷியா (காரைதீவு-8), செல்வராஜா பிரசாந்தினி (கல்முனை), மகேஸ்வரன் உகந்தேஸ் (கல்முனை-2), முகமட் இஸ்மில் முகமட் முஸ்தாகீம் (நிந்தவூர்-18), அருணாசலம் குகப்பிரியா (மட்டக்களப்பு), காரலசிங்கம் காண்டீபன் (களுவாஞ்சிக்குடி), லோகநாயகம் சந்திரபவன் (தம்பிலிவில்-2), அருணாசலம் நிலேந்திரிக்கா (கல்முனை), வல்லிபுரம் ஏனுகோபன் (பெரியபுரதீவு), காசுபதி பானுமதி (அக்கரைப்பற்று-7), கணேசதுரை ஜெயச்சந்திரா (தம்பிலிவில்-1) விஸ்வலிங்கம் ராஜகுமாரி (குருக்கள்மடம்), சிவஞானம் ராஜினி (கல்முனை-1), கணபதிப்பிள்ளை மோகனராஜா (காரைதீவு-1), துளசிநாதன் குகப்பிரியன் (செங்கலடி), விகாலி சிவலிங்கம் (அக்கரைப்பற்று), கனகசிங்கம் பிரேமகாந்தன் (களுவாஞ்சிக்குடி), அதம்பாவா பைசால் (சாமாந்துறை-10), கீதரன் அம்பிகாபதி (அக்கரைப்பற்று) இனியப்பிள்ளை நப்சன் (புல்மோட்டை) அதம்பாவா ரியாஸ் (பளமுனை-1), நவநாயகமூர்த்தி பிரசன்னா (அக்கரைப்பற்று), அப்துல் காபூர் முகமட் யார்சீஸ் (மருதமுனை-6), வரதராஜன் சுயன் (கல்முனை-2), மன்சூர் முகமட் சுதாத் (மூதூர்-1), இப்ரலெப் முகமட் தமீன் (மருதமுனை), துரையப்பா பாலசுந்தரம் (அக்கரைப்பற்று-8), பரமலிங்கம் மோகனதாஸ் (காரைதீவு-3), அப்துல்மயீட் யவ்வாரீ (ஏறாவூர்3), சீவசுந்தரம் சுசிரேய் (கிரான்குளம்-7), தங்கவடிவேல் தனிச்செல்வம் (காரைதீவு-4), பெரியதம்பி ரஞ்சன் (கல்முனை), சேம்பன் விஜயகுமார் (களுவாஞ்சிக்குடி), கிருஸ்ணபிள்ளை சசிகரன் (செங்கலடி), ரகுபாலன் சசிக்குமார் (களுவாஞ்சிக்குடி), நொபேர்ட் விலுவானி ராஜா அன்ரனீஸ் (நெடுந்தீவு), வீரசிங்கம் சாந்தரூபன் (உடுப்பிட்டி), யஸ்டீன் பிரான்டன் பியரிஸ் (பேசாலை), லியானாட் குரூஸ் யூலீன் மரியா (வங்காலை), ஜெயதாஸ் மரியநேசன் மிரண்டா (மன்னார்), கணேசமூர்த்தி பிரேமதாஸன் (கரவெட்டி), கனகலிங்கம் ஜெயகோபி (மானிப்பாய்), வேலாயுதப்பிள்ளை ரேனுகரூபன் (வரணி).

### சைவசமயம்

சுபாஜினி நடராசா (கிளிநொச்சி), யசோதா தர்மலிங்கம் (புதுக்குடியிருப்பு), காஞ்சனா கந்தையா (முல்லைத்தீவு), இராசேந்திரன் குணாகரன் (முல்லைத்தீவு) சுபாஜினி மயில்வாகனம் (முல்லைத்தீவு), சிவாணந்தம் கிருபானந்தராஜா (திருகோணமலை), செல்வராஜா பிரசாந்தினி (கல்முனை-1), தம்பிப்பிள்ளை றஜனி (அரியம்பதி), தர்மலிங்கம் பவமணி(சித்தாண்டி-3), தாமோதரன் நடேசமூர்த்தி (மட்டக்களப்பு), இலட்சுமணன் சுதாகரன் (மட்டக்களப்பு), யோகநாதன் ஜெணார்த்தனன் (களுவாஞ்சிக்குடி), பாலிப்பொடி யோகேந்திரன் (கிரான்குளம்), செல்லத்துரை ரஞ்சித்குமார் (கிரான்), காந்தமுத்து தேவராஜா (காரைக்குடா), சிறீகந்தராஜா சுஜிதா (கல்லாறு), வேல்முருகு சிறிவித்தியா (குருக்கள்மடம்), சின்னராசா ராதினி (பெரியபுரத்தீவு), முருகேசு ஜீவன் (கழுதாளை-1), மாமாங்கம் ஜீவகாந் (கொக்கட்டிச்சோலை), சுபர்ணா யோகராஜா (மட்டக்களப்பு), கணபதிப்பிள்ளை ஜீவானந்தன் (மட்டக்களப்பு), பெரியதம்பி மிதுலா (மட்டக்களப்பு), அமரசிங்கம் மாலதி (அரியம்பதி), சுந்தரலிங்கம் சுபானு (கிரான்), கிருஸ்ணபிள்ளை பிரியலலிதா (மட்டக்களப்பு), சந்திரகுமார் பிரேமினி (கல்முனை), விஜயதிஸ்சா புவிவண்ணன் (ஆரையம்பதி-3), கேசவமேனன் ஸ்ரீனிவாசன் (நற்பிட்டிமுனை-7), விஜயசுந்தரம் ராம்நாத் (வவுனியா), ராஜரட்ணம் சுதாகரன் (கனகராயன்குளம்), யாழினி தேவராஜா (கொழும்பு-6), சுதர்சினி புவனேஸ்வரசுந்தரம் (காரைநகர்), செல்வரட்ணம் ஜெணார்த்தன் (வவுனியா), தேவராஜா மிருசாயினி (அச்சுவெலி), அம்பிகை அருமைநாயகம் (தெல்லிப்பளை), தர்சினி சிவராசா (தெல்லிப்பளை), வாசுகி தம்பியைய்யா (கொக்குவில்), ஜெனித்தா குமாரவேலு (புத்தூர்), கனகலிங்கம் தயாகோபி (சங்குவேலி), நல்லதம்பி நிரஞ்சன் (கரவவெட்டி), துரைசிங்கம் ரஞ்சித்குமார் (சுன்னாகம்), மகேஸ்வரன் சுதாகரன் (சுன்னாகம்), வேலு சந்திரகலா(வவுனியா), சுப்பிரமணியம் லலித்தா (டிக்கோயா), கனகரத்தினம் அஜந்தினி (வவுனியா), தர்மலிங்கம் ஜெயப்பிரியா (வவுனியா), நவயோகநாதன் உருத்திரா (வவுனியா), தர்மலிங்கம் காந்தரூபன் (மட்டக்களப்பு), நாகரட்ணம் நிரஞ்சனி(மூதூர்), விஸ்வலிங்கம் மஞ்சுளா (அண்ணாமலை), தர்மலிங்கம் குவேந்திரன் (காரைதீவு-8), தாமோதரம் ஜெயகர் (அக்கரைப்பற்று), கதிரேசன் நல்லசிவம் (சிலாபம்), வேல்சாமி வீரசிங்கம் (எலா), வேலு சந்திரகலா (பதுளை)

### சமூகக் கல்வி

ரதசிங்கம் அருணன் (நெடுங்கண்டல்), சுந்தரலிங்கம் பிருந்தா (மல்லாவி), தங்கவேல் கல்ப்பனா (முல்லைத்தீவு) சங்கரப்பிள்ளை விஜித்தா (ஒட்டிசுட்டான்), அஜந்தா ராஜேந்திரன் (முள்ளியவளை)மகேந்திரன் கிருஸ்ணகுமார் (முல்லைத்ததீவு), அம்பலவானர் முரளிதரன் (மல்லாவி), சிதம்பரநாதன் சிவானந்தம், (முல்லைத்தீவு), உதுமா லெபி முகமட் முரிசித் (இறக்காமம்), தெய்வநாயகம் தயாவதி (பெரியபுலத்தீவு), பாலசுப்பிரமணியம் தர்மினி (வவுனியா), தர்மளா குகதாசன் (வவுனியா), குமாரசாமி சிறிமதி (வவுனியா),கணகசபாவதி சிவணந்தவர்மன் (வவுனியா) சேகு அப்துல் காதர் முகமட் அசான் (சியாம்பளகாஸ் கொரட்டுவ), ஜெயஞானசேகரம் குகாயினி (புளியக்குளம்), செல்வரட்ணம் ஜெனார்த்தன்(வவுனியா), பரம்சோதிநாதன் வாமதேவன் (மல்லாகம்), நற்குணம் கிரிதரன் (கோண்டாவில்), பீதாம்பரம் ஜெகப்பிரியா (வல்வெட்டித்துறை), கணேசரட்ணம் ஜெகமாலா (பருத்தித்துறை) புலேந்திரராஜா அனித்தா (கோண்டாவில்) செல்வரட்ணம் மதியழகன் (அரியாலை), மகேந்திரன் சுவேந்திரன் (யாழ்ப்பாணம்), ரட்ணசிங்கம் ரணிசன் (யாழ்ப்பாணம்), ராமநாதன் ரட்ணராஜா (கோண்டாவில்), தர்ப்பரநாதன் சிவரூபன் (நீர்வேலி), திருநாவுக்கரசு மதிபரன் (சாவகச்சேரி), ஜெயரட்ணம் நிஷாகர் (கோப்பாய்), துரைசிங்கம் சுசிகரன் (அரியாலை) ஜெயநாதன் ஜெயராஜா (கரவெட்டி), ஆறுமுகம் வாமதேவன் (அச்சுவேலி), ரட்ணராஜா ரஜினி (ஆனைப்பந்தி), விவேகானந்தன் சந்திரிக்கா (அல்வாய்), சற் குணசிங்கம் நிஷாந்தினி (சுன்னாகம்), கணேசன் அனுஷா (மானிப்பாய்) கேட்சனம் பரிமளா (கரவெட்டி), பேரின்பநாதன் தேன்மொழி (கொட்டடி),வைரமுத்து பத்மாசினி (தொல்லிப்பளை), சிவநந்தினி குணரத்தினம் (ஆனைக்கோட்டை), சரவணபவானந்தன் சங்கீத்தா (வட்டுக்கோட்டை),முருகேசு சுதர்சினி (வரணி), வேலாயுதம் சிறிமதி (பருத்தித்துறை),தாரணி கனகசிவநாயகம் (கோண்டாவில்), றசினு முகமட் சரூவ்(களவல), குமுதினி தியாகலிங்கம் (கிளிநொச்சி), செல்வராஜா செல்வரஞ்சினி (உடையார்கட்டு), ராஜகாந்தன் ரமணன் (புளியங்குளம்), முகமட் தகீஸ் மார்ஸ்சுக (தோப்பு).*(மிகுதி நாளை தொடரும்)*

# விளையாட்டு

## ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு இன்னொரு தங்கம்!

### 400 மீற். ஓட்டத்தில் தமயந்தி தர்ஷா வென்றார்

(புஷான்)

தென் கொரியாவின் புஷான் நகரில் நடைபெற்றுவரும் ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் நேற்று நடந்த 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இலங்கை வீராங்கனை தமயந்தி தர்ஷா தங்கப்பதக்கத்தை வென்றார்.

நேற்று நண்பகல் நடந்த 400 மீற்றர் ஓட்டத்தை 51.13 செக்கன்களில் ஓடிமுடித்து தமயந்தி தர்சா ஆசிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை பெறும் இரண்டாவது தங்கப்பதக்கம் இதுவாகும். இலங்கை வெள்ளிப் பதக்கம் ஒன்றையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலாசாலை மாணவர்களுக்கு மகரகமவில் போட்டிகள்

(ஊரெழு)

இவ்வருடம் அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அடுத்தமாதம் முதல் வாரத்தில் மகரஹமவில் இடம்பெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்கான தெரிவுப் போட்டிகள் இம்மாதம் 16ஆம், 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதென்றும் இத்தெரிவுப் போட்டி, பலாலி மற்றும் கோப்பாய் கலாசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாபெரும் சதுரங்கப் போட்டி

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தின் மாபெரும் சதுரங்கப் போட்டிகள் நாளையும், நாளைமறுதினமும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களிடம் இருந்து இலங்கைச் சதுரங்கச் சம்பியன் தெரிவு மற்றும் இலங்கைத் அணித் தெரிவு ஆகியவற்றுக்கான யாழ். வீரர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாணச் சதுரங்கச் சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## வட்டுக்கோட்டையில் உதைபந்தாட்ட போட்டி

(இளவாலை)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிகளுக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கும் இடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 2.30மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

(41)


## தவறிவிட்டது

துன்மலை, இளவாலையைச் சேர்ந்த தங்கராஜா சிவனேசராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 582521034V) தவறிவீட்டது. கண்டெடுத்தவர்கள் "நமது ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (010)



## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 12.10.2002 காலை.9.00-பி.ப4.00 | - மல்லாகம் பிரதேசம் மட்டும் |
| 19.10.2002 காலை.9.00-பி.ப4.00 | - ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், செம்மணி, திருநெல்வேலி |
| 26.10.2002 காலை.9.00-பி.ப4.00 | - மருதனார்மடம், இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, கோம்பயன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி. |
| 02.11.2002 காலை.9.00-பி.ப4.00 | - புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி |
| 09.11.2002 காலை.9.00-பி.ப4.00 | - உரும்பிராய், கோண்டாவில், பொற்பதிவீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ்.மாநகரசபைப் பகுதி. |
| 16.11.2002 காலை.9.00-பி.ப4.00 | - கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

*பிரதேச மின் பொறியியலாளர்,*
*இலங்கை மின்சாரசபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.*

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.

(சி-046)

# 10ஆயிரம் ஈழத்தமிழர்க்கு வரும் ஆண்டு ஜேர்மனியில் தற்காலிக வசிப்புரிமை!

(நமது நிருபர்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள - 10,000 க்கும் அதிக மான ஈழத்தமிழர்களுக்கு வரும் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் தற்காலிக வசிப்புரிமை வழங் கப்பட்டிருப்பதாக ஜேர்மனி அரசாங் கத்தின் அரசியல் திறனாய்வாள ரான இராமச்சந்திரன் தெரிவித்தார்.

நமது ஈழநாட்டுக்கு நேற்று விசேட பேட்டி ஒன்றை அளித்த அவர் அப்பேட்டியில் தெரிவித்த தாவது -

ஜேர்மனியில் புதிய பலத்துடன் அரசமைத்துள்ள அரசாங்கமானது - தனது முன்னைய திட்டமான, வெளிநாட்டவர்களுக்கு தற்காலிக வசிப்புரிமை வழங்கும் திட்டத்தின் கீழ், வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் - ஜேர்மனியிலுள்ள 10,000 ஈழத்தமிழ் அகதிகளுக்கு தற்கா லிக வசிப்புரிமையை வழங்கவுள் ளது.

அண்மையில் ஜேர்மனைச் சேர்ந்த நீதிபதிகள் குழுவொன்று - யாழ்ப் பாணம் வந்து - அகதிகளை மீளத் திருப்பி அனுப்புவதற்கான சூழலைப் பற்றி ஆராய்நதுள்ளதாயினும் - அகதிகளை ஒட்டுமொத்தமாக திருப் பியனுப்புவது சாத்தியமற்றதே.

நீண்ட நாட்களாக, சராசரியாக ஆறு வருடங்களுக்கும் அதிகமாக ஜேர்மனியில் வசித்து, தொழில் பார்த்து வருபவர்களுக்கும் -

தாம் தொழில் செய்யும் தொழி லதிபர்களால் விரும்பத்தக்கவர்கள் என ஜேர்மனி வேலைத் திணைக் களத்தால் சிபாரிசு செய்யப்படுபவர் களும் -

இலங்கையிலிருந்து ஜேர்மனிக் குச் சென்ற பின்பு - அங்கு வைத்து நோய்வாய்ப்பட்டவர்களும் - குறிப் பாக, ஜேர்மனியிலேயே அவர்கள் மருத்துவவசதி பெறவேண்டுமென்ற நிலையிலுள்ளவர்களும்,

ஜேர்மனியில் நீண்ட நாட்களாக கல்வி கற்கும் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும்,

மனிதாபிமான அடிப்படையில் புதிய சட்டத்தின்கீழ் தற்காலிக வசிப்புரிமை முன்னுரிமையுடைய வர்கள் என அவர் கூறினார்.

இதேவேளை - இனிவரும் காலங் களில் ஜேர்மனியில் தஞ்சம் புகு வோரின் புகலிடக் கோரிக்கைகளை விரைவாக விசாரித்து முடிவுசெய்ய ஜேர்மனிய அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இரண்டு, மூன்று மாதங்களுக் குள் இந்த முடிவு அறிவிக்கப்படும் என்றும், சமாதானச் சூழலிலும் புக லிடக் கோரிக்கைகள் நியாயபூர்வ மான முறையில் அணுகப்படும் என் றும் ஜேர்மன் அரசாங்கம் தீர்மானித் திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## விபத்தில் காயம்!

மண்டைதீவுச் சந்தியில் கடந்த 7 ஆம் திகதி இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளை ஓட்டி வந்த குணரட்ணம் (வயது 50) என்பவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டியவர் பக்கமாறி வந்ததால் இவ்விபத்து ஏற்பட்டதாகவும், அவர்கள் தப்பி விட்டதாகவும் காயமடைந்து வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளவர் தெரிவித்தார்.

## முகாமைத்துவ நோக்கு சஞ்சிகை வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக முகா மைத்துவ மாணவர் மன்றத்தினால் "முகாமைநோக்கு சஞ்சிகை-7" வெளியீட்டு விழா முகாமைத்துவ மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை 2.30 மணியளவில் தலைவர் தி.நவநீதன் தலைமையில் இடம் பெற்றது.

பிரதமவிருந்தினராகப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன்பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக முகாமைத்துவ கற்கை கள் வணிகபீட பீடாதிபதி மா. நடராஜசுந்தரமும் கலந்து கொண்ட னர். வெளியீட்டுரையினை வணிகத் துறைத்தலைவர் க.தேவராஜாவும் மதிப்பீட்டு உரையினை பொருளியற் துறை தலைவர் வி.பி.சிவநாதனும் நிகழ்த்தினர். (63)





முகாமை நோக்கு சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதை முதற்படத்திலும், பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் முதற் பிரதியை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (63)

# அரசின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிறது!

## கைதிகள் விடயம்பற்றிக் கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

முன்பு ஜே.வி.பியினருடன் புரிந் துணர்வு உடன்படிக்கை செய்த போது இரவோடு இரவாக சிறையில் அடைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஜே.வி.பியினர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் இப்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுவிப்பதில் அரசு பாராமுகமாக இருக்கிறது என யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க குருக் கள் ஒன்றியம் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது - களுத்துறை, வெலிக் கடை, மட்டக்களப்பு மற்றும் சிறை களில் இருக்கும் தமிழ் கைதிகள் விடயத்தில் அரசு தொடர்ந்தும் காட் டிவரும் மாற்றான்தாய் மனப்பான்மை அரசின் நம்பகத்தன்மையைக் கேள் விக்குறியாக்கியுள்ளது. இவ்வாறு தன் மக்களுக்கு நீதியுடன் கூடிய சமாதானத்தை வழங்க இதய சுத்தி யுடன் பாடுபடுமா என்பது சந்தேகத்திற் கிடமாகியுள்ளது.

பல வருடங்களாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களைப் பொறுத்த மட்டில் யுத்தநிறுத்தம் புரிந்துணர்வு உடன்படிக்கை, சமா தானப்பேச்சுவார்த்தை எனும் பல் வேறு முன்னெடுப்புக்கள் மேற்கொள் ளப்பட்ட பின்பும் இவ்விளைஞர்கள் மட்டில் அரசு பாராமுகமாக இருப் பது அரசின் அநீதியான அணுகு முறையை அப்பட்டமாகக் காட்டுகி றது. தமிழ்மக்களுக்கு அரசின் மீது மீண்டும் நம்பிக்கை உருவாக வேண்டுமெனில் இத்தமிழ் இளை ஞர்களையும் பெண்களையும் உட னடியாக நிபந்தனையின்றி விடு தலை செய்ய வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் யாழ் கத்ததோலிக்க மறைமாவட்ட நீதி-சமாதான ஆணைக் குழு விடுத்துள்ள அறிக்கையில்:-

பலமாக நீதிவிசாரணை மறுக் கப்பட்டுள்ள மேற்படி கைதிகளை உடன் விடுவிக்குமாறு கோருகிறோம். குறைந்தபட்சம், அவர்களுடைய குற்றம் என்னவென்பதை நீதிமன்றம் கூறட்டும்.

பயங்கரவாத தடைச்சட் டத்தின் கீழ் இவர்கள் கைதுசெய் யப்பட்டார் கள். நீண்டகாலமாக நீதிவிசார ணையின்றி இவர்கள் சிறைப்படுத்தப் பட்டிருப்பதே பயங்கரவாதம்.

கடந்த வருடங்களில் பலதடவை கள் இக்கைதிகள் சார்பாகவும், இச் சட்டத்திற்கு எதிராகவும் அதை ரத்து செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு நாம் கோரிக்கை விடுத்துள் ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அகவொளி புதிய இடத்தில்

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதி யில் தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த "அகவொளி"- குடும்ப வளத் துணை நிலையம், தற்போது யாழ். மரியன்னை பேராலய வளவில் அதற் கென அமைக்கப்பட்ட நிரந்தரமான கட்டடத்தில் இயங்கத் தொடங்கி யுள்ளது.

## வான் - ஓட்டோ விபத்து

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதி ஆசிர் வாதப்பர் வீதி சந்தியில் நேற்று மாலை 5மணியளவில் வான் ஒன் றும் ஆட்டோ ஒன்றும் மோதியதில் ஓட்டோ முன்பக்கம் சிதைவுக்குள் ளாகியுள்ளது.

இவ் வீதிவிபத்தில் ஆட்டோ சார தியான நாவாந்துறையைச் சேர்ந்த த. சந்திரசேகரன் என்பவர் காயம டைந்து யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (லி)

## கத்தோலிக்க சங்க சாகித்திய விழா டிசெம்பரில்

(மானிப்பாய்)

கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத் தால் நடத்தப்படும் 2002 ஆண்டுக் கான சாகித்திய விழா எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு தேசிய கத் தோலிக்கர்கள் மட்டும் பங்குபற்றும் இலக்கியப் போட்டிகள் தமிழ், ஆங் கிலம், சிங்களம் ஆகிய மும்மொழி களிலும் நடத்தப்படவுள்ளது.

மாணவர்களுக்கான சிறுகதை, கட்டுரைப் போட்டிகள் 10ஆம் வகுப் பிலிருந்து 13 ஆம் வகுப்பு வரையி லான மாணவர்களும், பெரியவர்களுக கான சிறுகதைப்போட்டி 1500 சொற் களுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

படைப்பாளர்கள் தங்கள் ஆக்கங் களை தேசிய கத்தோலிக்க எழுத்தா ளர் சங்கம், பேராயர் இல்லம், கொழும்பு - 08 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (100)

# பனை மரங்களைத் தறிக்க முற்றாகத் தடைவிதிப்பு!

வடக்கு - கிழக்கு மாகாணங் களில் பனை மரங்களைத் தறிப் பது முற்றாகத் தடைசெய்யப்பட் டுள்ளதாக தமிமீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள் ளது.

வட-கிழக்கு மாகாணத்தில் கடந்த பத்து வருடங்களில் 25 இலட்சம் பனைமரங்கள் யுத்தத் தால் அழிக்கப்பட்டுள்ளமையாலும் அதனை நம்பியுள்ள 40,000 குடும் பங்களின் வருமானங்கள் பாதிப் படைவதாலும் தற்போது மீள் நடுகை செய்யப்படும் பனைமரங்கள் முழு மையான பயனைத் தருவதற்கு குறைந்தது 30 வருடங்கள் எடுக்கு மாகையாலும் கடந்த 7 ஆம் திகதி முதல் வட-கிழக்கு மாகாணங்களில் பனைமரம் தறிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக த.பொ.மே. நிறுவனம் அறிவித்துள்ளது.

கட்டட வேலைகளுக்கு பனை மரங்களுக்கு பதிலாக ஏனைய மரங் களை பாவிக்குமாறும் கோரப்பட்டுள் ளது. அவ்வகையான பதிலீட்டு மரங்கள் தென்பகுதியிலிருந்து கொண்டு வருவதற்கான தீர்வைகள் விலக்கு அளிக்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## கல்வி அபிவிருத்தி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அபிவிருத்தி தொடர்பான விடயங்களை கலந்துரையாடும் முகமாக விசேடகூட்டம் ஒன்று எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதி களில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சு செயலாளரின் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வட-கிழக்கு மாகாண ஆளுனரும் வருகைதரவுள் ளார். இக்கூட்டத்திற்கு சகல மேல திக மாகாணக் கல்விப் பணிப்பா ளர்களையும், வலயக் கல்விப்பணிப் பாளர்களையும் கலந்துகொள்ளு மாறும் கேட்கப்பட்டுள்ளது. (வி)

## வலி.வடக்கு பிரதேச ச.சமூக நிலையங்களுக்கான கூட்டம்

வலி.வடக்கு பிரதேச சபை எல் லைக்குட்பட்ட ச.சமூக நிலையங் களுக்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிறு காலை9.30 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது. இக்கூட்டத்தில் இந்த ஆண்டிற்கான சனசமூக நிலையங் களுக்கான நன்கொடை வழங்குவது பற்றியும் ஆராயப்படவுள்ளதாக கூறப் படுகிறது. இக்கூட்டம் வலி.வடக்கு சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.(68)

# அச்சுவேலி வைத்தியசாலையில் பென்சிலின், பனடோலுக்கு தட்டுப்பாடு

## தனியார் கடைகளுக்குச் செல்லும் நோயாளர்கள்

(வலி.கிழக்கு)

அச்சுவேலி அரசினர் வைத் தியசாலையில் பென்சிலின் மருந்து இன்மையால் நோயாளர்கள் தனி யார் கடைகளை நாடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களுக்கு பென் சிலின் ஊசி மருந்து தனியார் கடை களில் வாங்கி வருமாறு கூறப்படு கின்றது. அத்துடன் வெளிநோயாள ருக்கு பனடோல் வில்லைகளை தனி யார் கடைகளில் வாங்குமாறும் கூறப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையால் அச்சுவேலி அரசி னர் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பலத்த அசௌகரியங் களுக்கு உள்ளாகி வருகின்றனர்.(79)

# சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 40 இந்தியர்கள் கொழும்பில் கைது!

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 40 இந்தியர்களை இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் கைது செய்துள்ளது.

சார்க் நாடுகள் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டு அடிப்படையில் ஒவ்வொரு அங் கத்துவ நாடும் மற்றைய நாட்டைச் சேர்ந்த பிரஜைகளுக்கு ஒரு மாத கால விசா வழங்க முடியும். அதனைப் பயன்படுத்தியே இவர்கள் இலங்கை வந்திருந்தார்கள்.

இவர்களது விசா முடிவடைந்த பின்னும் இவர்கள் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்லாது சட்ட விரோத மாக இங்கு தங்கியிருந்தனர் என வும், விரைவில் இவர்கள் சொந்த நாடான இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் குடி வரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் மேவின் விஜயசேகர தெரிவித்தார்.

இவர்கள் பல்வேறு தொழில் ஸ்தா பனத்தில வேலை செய்து வந்ததாக வும் குறிப்பாக கொழும்பில் உள்ள நகைக் கடைகளில் வேலை பார்த்து வந்ததாகவும் தெரியவருகின்றது.

## சனிக்கிழமையிலும் திறந்திருக்கும்

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப் பாணக் கிளை கடந்த 5ஆம் திகதி முதல் சனிக்கிழமைகளிலும் வாடிக் கையாளர்களுக்காகத் திறந்திருப்ப தாக கிளையின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

பிரதி சனிக்கிழமை தோறும் கொமர்ஷல் வங்கி காலை 10மணி முதல் மாலை 2.30 மணி வரையும் திறந்திருக்கும். சனிக்கிழமைகளில் எல்லா வங்கிச் செயற்பாடுகளும் இடம்பெற்றாலும், சில கருமங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் இது தொடர்பாக வங்கி முகாமையா ளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல்; தனிக்காட்டு ராஜாவாக முஷாரப்!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்த்தானின் ஜனாதிபதித்



தேர்தல் நேற்று ஆரம்பமானது. 1999 இல் பாகிஸ்த்தானின் ஜனநாயக அரசை இரத்தம் சிந்தாத புரட்சி மூலம் கைப்பற்றிய இராணுவத் தளபதி பெர்வஷ் முஷாரப் தேர்தல் தொடர்பான சில புதிய சட்டங்களை தனக்குச் சாதகமாக அறிமுகப்படுத்தியிருந்தார்.

பாகிஸ்தானின் முன்னைய ஆட்சிக்காலங்களில் இடம்பெற்ற ஊழல் மற்றும் நிர்வாகச்சீர்கேடுகளை முஷாரப் சீரமைத்து வருவதாக பாகிஸ்தான் மக்களில் கணிசமான தொகையினர் கருதுகின்றனர்.

பாகிஸ்தானில் தற்பொழுது அமுலில் உள்ள சட்டங்களுள், பட்டதாரிகள் மட்டுமே பாராளுமன்றத்தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கலாம் என்பதும் ஒன்றாகும்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளராக ஆட்சிப்பீடமேறிய பெர்வேஷ் முஷாரப் தன்னைப் பாகிஸ்தானின் ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்திருந்தார். பாராளுமன்ற தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படுகிறது என்று அவர் அறிவித்திருந்தார். அத்துடன் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் தெரிவு செய்யப்படவுள்ளார். அப்பிரதமர் ஊழல், லஞ்சம் அற்ற ஒரு நல்ல ஆட்சியாளராக இருக்கவேண்டும் என்பது நிபந்தனையாகும்.

பாக்கிஸ்தான் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமரிடம் ஆட்சியை ஒப்படைத்தாலும் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் தன்னிடமே இருக்கும் என்றும் அறிவித்துள்ளார். அத்துடன் நாட்டினுடைய முக்கிய பிரச்சினைகளில் தன்னுடைய தீர்மானமே இறுதியானது என்றும் தெரிவித்துள்ளார்

தற்போதைய ஆட்சியாளர் முஷாரப் தானும் ஒரு வேட்பாளராக தேர்தலில் நிற்கின்றார். முன்னாள் பிரதமர்களான பெனாஸீர் பூட்டோ, நாவப் ஷெரிவ் ஆகியோர் தேசத்து ரோகக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டு வேட்பாளராக நிற்கும் தகுதியை இழக்கச் செய்யப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் வாக்கு எண்ணும் பணி ஆரம்பம்

(சிறி நகர்)

ஜம்மு-காஷ்மீர் சட்ட சபைக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்றுக் காலை ஆரம்பமானது. நான்கு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைகளின் போது சுமார் 600 பேர் வரை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

## இந்திய உளவாளி கைது பாக். பொலிஸ் அறிவிப்பு!

(இஸ்லாமாபாத்)

இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் பயிற்றுவிக்கப்பட்டு அனுப்பப் பட்டதாக சந்தேகிக்கப்பட்ட நபர் ஒருவரைப் பாகிஸ்தான் பொலிஸார் கைதுசெய்து உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இவர் தேர்தலைக் குழப்பும் நோக்குடன் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்காகவே வந்துள்ளார் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தார். குண்டுத் தாக்குதல் நடத்துவதற்காகவே தான் வந்துள்ளதென்பதை அந்நபர் ஒப்புக் கொண்டுள்ளார் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பத்து நாட்களில் இது போன்று ஒன்பதுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் கூறுகின்றனர்.

## அமெரிக்கா - குவைத் படைப்பயிற்சியில் அல்கெய்டா குழுவினர் தாக்குதல்!

குவைத் நாட்டுக்குச் சொந்தமான தீவு ஒன்றில் நேற்றுமுன்தினம் அமெரிக்க - குவைத் கூட்டுப்படைப் பயிற்சி நடவடிக்கையின்போது அல் கேடா அமைப்பைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தார்கள் என்று அமெரிக்க கூறுகின்றது.

அமெரிக்கத் துருப்பினர்மீது ஏ.கே.ரகத் துப்பாக்கிகளினால் தாக்குதல் நடத்தியோர்மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்டதால், தாக்கிய இருவரும் கொல்லப்பட்டதுடன் அவர்களின் ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக குவைத் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இத்தாக்குதலில் ஒரு அமெரிக்க இராணுவச் சிப்பாய் கொல்லப்பட மற்றொருவர் காயமடைந்தார்.

அண்மைக்காலமாக குவைத் நாட்டு இளைஞர்கள், முஸ்லீம் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் முப்பது பேர் குவைத் அரசால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தாக்குதல் நடத்திக் கொல்லப்பட்ட இளைஞர்களுள் ஒருவர் கியூபப் பிரதேசத்தில் அமெரிக்காவிற்குச் சொந்தமான கடற்படைத் தளத்தில் கைதியாகவுள்ள அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவரின் உறவினராவார் என்று தெரிவிக்கப்பட்டது.



ஆரியத் தூய்மைவாத மிடுக்குடன் உற்சாகமான தனது படையினர் மத்தியில் கம்பீர நடைபோடும் ஜேர்மனியின் தலைவர் ஹிட்லர்.
(காட்சியின் காலம் - 1934)




இரண்டாம் உலகப் போரில் கைபற்றப்பட்ட ஹிட்லரின் படைவீரர்கள் லிம்பேர்க் நகருக்கு அருகில் போர்க் கைதிகளாக செல்கின்றனர்.
(காட்சியின் காலம் - 1945)

## ஜோர்ஜ் புஷ் - ஷிராக் பேச்சு பிளயர் ரஷ்யாவுக்குப் பயணம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பிரெஞ் ஜனாதிபதி



ஜக் ஷிராக்குடன் ஈராக் விவகாரம் தொடர்பாக தொலைபேசி மூலம் கதைத்துள்ளார்.

அதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளயர், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார்.

ஈராக்மீது இராணுவ நடவடிக்கை எடுத்தல் என்ற தீர்மானத்தை ஏற்க முடியாது என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின், நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். எந்தப் புதிய தீர்மான வரைவும் ஈராக்மீது இராணுவ நடவடிககை மேற்கொள்வது என்ற விடயம் அடங்காததாகவே அமைய வேண்டும் என்று ரஷ்ய வெளிவிவகாரதுணை அமைச்சர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் போர் பற்றிய நிலைப்பாட்டுக்கு ஆதரவளிப்பது பற்றிய விவாதம் அமெரிக்க காங்கிரஸில் நடைபெறுகிறது. அமெரிக்கா ஈராக்மீது பலப்பிரயோகம் மேற்கொள்வதை காங்கிரஸில் உள்ள ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சியைச் சேர்ந்தோர் ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை உள்ளது.

பிரான்ஸ், ரஷ்யத் தலைவர்களுடன் அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள் மேற்கொண்டுள்ள



பேச்சுக்கள் ஒரு இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்குரிய சூழ்நிலைக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் வருவதற்கு வழிவகுக்கும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

### வேலைநிறுத்தக் காரர்களைப் பணிக்கு அழைத்தார் புஷ்

## மெல்ல வழமைக்குத் திரும்பும் அமெரிக்க பசுபிக் துறைமுகங்கள்!

(லண்டன்)

அமெரிக்க பசுபிக் துறைமுகங்களில் இடம்பெறும் வேலை நிறுத்தங்களில் அமெரிக்க ஜனாதிபதி நேரடித் தலையீடுகள் செய்துள்ளதையடுத்து, சியாட்டில் துறைமுகத்தில் துறைமுகப் பணியாளர் சிறிய அளவில் பணிக்குத் திரும்பியுள்ளனர். துறைமுகப் பணிகளும் மெல்ல மெல்ல ஆரம்பமாகியுள்ளன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பணிக்குத் திரும்பும் உத்தரவை வழங்குவதற்கான அனுமதி, சமஷ்டி நீதிபதியினால் ஜோர்ஜ் டபிள்யூ புஷ். அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறான ஒரு அனுமதியைத் தரும்படி புஷ், சமஷ்டி நீதிமன்றத்திடம் கேட்டிருந்ததையடுத்து நீதிபதி அதற்கான அனுமதியையும் அங்கீகாரத்தையும் வழங்கியிருந்தார்.

இந்த வேலைநிறுத்தம் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாகவுள்ளது என்று எச்சரித்த ஜனாதிபதி துறைமுகப் பணியாளர்களின் பிரச்சினைகளை ஆராய விசாரணைக்குழு ஒன்றையும் அமைத்திருந்தார்.

கடந்த இருபத்தைந்து வருடங்களுள் சமஷ்டி நீதிமன்றத்திடம் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஒன்றை அணுகிய ஜனாதிபதியாக புஷ் காணப்படுகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வேலை நிறுத்தத்தினால் நாளொன்றுக்கு இரண்டு பில்லியன் டொலர்கள் இழப்பு அமெரிக்க பொருளாதாரத்துக்கு ஏற்பட்டது. துறைமுகங்களினூடாக வருகின்ற வருமான இழப்பாகவே இது அமைந்தது.

திடீரென அமெரிக்க வாகன உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டிருந்தன. விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷிய கலவரத்தில் மூவர் பலி!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் சர்ச்சைக்குரிய ஏர்ச் பிராந்தியத்தில் நடைபெற்ற கலவரங்களின்போது கலவரக்காரர்கள் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே தீவிரவாதிகளுடன் பேச்சு

### - ஐவரிகோஸ்ட் அரசு அறிவிப்பு -

(பிறிரவுண்)

ஆயுதங்களை ஒப்படைத்து பேச்சுக்களுக்கு வருமாறு ஐவரிக் கோஸ்ட் அரசாங்கம், தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தது.

ஆயுதங்களை ஒப்படைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அந்த அமைப்பு நிராகரித்துவிட்டது. நிபந்தனைகள் எதுவும் விதிக்கப் படாத நிலையிலேயேதாம் பேச்சுக்கள் நடத்தமுடியும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிக்கோட்ஸ்டில், மேற்கு ஆபிரிக்காவின் ஐந்துக்கும் மேற்பட்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மத்தியஸ்தம் செய்து சமாதானத்தைக் ஏற்படுத்துவதற்கு போர் நிறுத்த உடன்பாடு ஒன்றைக் கொண்டுவர முனைந்தனர்.

ஆனால் போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்த ஐவரிக்கோஸ்ட் அரசு, தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நகரம்மீது தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது.



# வரன் கொடுக்கும் தட்சணை வரனுக்கு கொடுக்கும் தட்சணையானது



சீதனம் என்பது சமூத்தில் பெண்களுக்கு தீங்கிழைக்கும் ஒரு முக்கிய காரணியாகவே இருந்து வருகிறது. ஆண்பிறந்தால் ஐந்து இலட்சத்துக்கு வரவுக்கணக்கு, 'பெண் பிறந்தால் ஐந்து இலட்சத்தில் செலவுக்கணக்கு' ஆண் பெற்றவன் அரசன் பெண் பெற்றவன் பிச்சைக்காரன் என்ற பழமொழிகள் எல்லாம் எங்கள் சமுதாயத்தின் பொன் முலாம் பூசப்பட்ட பெயர்ப்பலகைகளயல்லவா?

முற்காலத்தில் ஆண்மகன்தான் பெண்ணுக்கு வரதட்சணை கொடுப்பது வழக்கம்.வரன்கொடுக்கும் தட்சணை என்பதால் வரதட்சணையானது. ஆனால் அது நாளைடைவில் வரனுக்கு கொடுக்கப்படுகின்ற தட்சணையாக மாறிவிட்டது. எது எவ்வாறாயினும் சீதன முறையினால் ஏழைகளே அதிகம். பாதிக்கப்படுகின்றனர். பணம் படைத்தவர்கள் கொடுப்பதற்கு தயாராவே இருக்கின்றனர் என்பதை யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றின் விளம்பரத்தில் கூடக் காணலாம்.





மணமகள் தேவை

வேலையாள் தேவை

இவர்களின் விளம்பரங்கள் இப்படியாக அமையும் போது பணவசதியற்றவர்களின் குடும்பங்களில் உள்ள பெண்களின் நிலை என்னவாகும்? ஏன் மணமகன் கூட தனது கல்வியறிவையும், உயர்பதவியையும் பணத்திற்காகவும் பொருளுக்காகவும் பேரம் பேசத் தயாராகவே இருக்கின்றான்.

பெண் வளர்கின்ற போதே சீதனப் பணமும் வளரவேண்டும். இல்லயேல் பெற்றவர்கள் மனதில் ஏக்கமும் கவலையுமே வளர்கின்றன. பெண் எவ்வளவுக்கு கூடக்கூடக் கற்று உயர் பதவிகளை அடைகிறாளோ அதேயளவிற்கு சீதனமும் அதிகமாகவே தேவைப்படுகின்றது. ஏனெனில் இன்றைய சமூக அமைப்பில் பெண்களின் அந்தஸ்திற்கு கூடியளவு சமனான கணவனே தேவைப்படுகின்றான். இதுதான் சமூக எதிர்பார்ப்பும் கூட.

இந்தச் சீதனப் பிரச்சினையானது இங்கு இருக்கும் நிலையை விட இந்தியாவிலேயே அதிகமாக பாதிப்பை விளைவிப்பதாக காணப்படுகிறது. சீதனம் பெற்று மணம் முடித்த பின்பும் - மேலும் பணம் கேட்டுத் தங்கள் மனைவிமாரைத் துன்பப்படுத்தும் ஏன் கொலை செய்யக்கூடத் துணியும் அளவிற்கு ஆண்களும், புகுந்த வீடு சார்ந்தவர்களும் அங்கு காணப்படுகின்றனர். தமக்குப் பணம் தேவைப்படும் போது பெண் இம்சிக்கப்படுகிறாள் பேச்சு, அடி, உதை எனத் தொடரும் இந்தச் சித்திரவதைகள் மரணதிலும் கூட முடிகின்றது.

இது பற்றி தமிழக் கவிஞர்இரா.வேலுச்சாமி இப்படிக் கூறுகின்றார்.

மணமான பின்னும்
மறுபடியும் போர் தொடங்கும்
திருமண வாக்குறுதிகள்
தேர்தல் வாக்குறுதிகள் போல
திசை தப்பிப் போன போது-இவர்கள்
மதுரையை எரிக்க முடியாமல்
மண்ணெண்ணெய்க் குளியல்களில்
மரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சீதனம் வாங்குவதையே இலக்காக கொண்டுள்ள இளைஞர்களைப் பார்த்து பெண் கவிஞரான அரசு மணிமேகலையின்

இந்த நாட்டின்
இணையிலா ஆடவர்
ஏழு இலட்சம் சீதனம் என்றால்
எழுபது வயதுப்
பெண்ணையும் மணப்பர்
பெண்களையென்ன
பிணத்தையும் மணப்பர்.

என்ற வரிகள் உணர்ச்சிக் கொப்பளிப்பின் ஊற்றெடுப்பாக அமைந்துள்ளது.

கவிஞர் துறவி அவர்கள் சீதனம் வாங்கும் இளைஞர்களைப் பார்த்து

ஓ வாலிபனே!
உனது
ஆண்மையின் கம்பீரத்தை
கேவலம்
சீதனக் கல்லறையிலா
சவமாக்கிப் புதைப்பது?

என்று கேட்கிறார். இவ்வாறாக சீதனப் பிரச்சினைக்கு சாவுமணி அடிக்க பலவகையான முனைப்புக்களிற்க்கு நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த முனைப்புகள் சமூகம் எவ்வாறு முகம் கொடுக்கிறது. அதைநடைமுறைப்படுத்த எத்தணிக்கிறது என்பதில் தான் 'சீதனத்திற்கு சாவுமணி' என்பது பலமாக ஒலிக்கும்.

சீதனம் வாங்கி பிறர் உழைப்பில் வாழும் போலி வாழ்வு இருக்கும் வரை பெண்ணினம் வருந்த வேண்டியே இருக்கும். ஆணினம் பழி கேட்க வேண்டியே இருக்கும்.

## என் வாழ்வு மலரும்

குழந்தை வரம் கேட்டு -என்
அம்மா அழுதது ஞாபகம்
நேர்த்தி பல வைத்து -என்
அப்பா விரதமிருந்ததும் ஞாபகம்
நானும் பெண் என்பதை
இறைவனும் புரியவைக்கவில்லை
ஆயினும்! .. நான்
வாழப்பிறந்தவள் போலும்
மழலை மொழி மறையும் மட்டும்தான்
செல்லப்பிள்ளையாய்...
எனக்கு சுதந்திரம்...
இன்று என்
சின்ன சின்ன ஆசைகள்
சிறகொடிக்கப்படுகின்றன
புயலாக வேண்டிய என்னுள்ளம்
புதைக்கப்படுகின்றது
கல்வியும் உத்தியோகமும் திருமணமும்
மட்டுமல்ல என் வாழ்வு
காத்திருக்கின்றேன் - என்
விழித்திருந்த விழிகளுடன்
எனக்காக வாழ்வு மலரும்
நான் விரும்பும் என் வாழ்வு மலரும்.

தர்மினி பத்மநாதன்

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்





சிந்தி,

உனது பதில், எனக்கு உற்சாகமுட்டுவதாக அமைந்ததில் மிகவும் மகிழ்ச்சி.

எனது முன்னைய கடிதத்தில் நான் கூறிய ஒன்றைப் பற்றி நீ விளக்கங் கேட்டிருந்தாய், நாம் கற்பனை செய்யும் விடயங்களைப் பற்றிக் கதைக்கிறோமென்று பெண்கள் நினைக்கக்கூடாது என எழுதியிருந்தேன். அப்படி எதைக் கருதி எழுதினேன் என்று கேட்டிருந்தாய்.

சென்ற மாதம் ஒரு பல்கலைக்கழக மாணவியைச் சந்தித்தபொழுது அவள் ஒரு விடயத்தைக் கூறினாள். பெண்கள் உயர்பதவி வகிப்பது குறைவாக இருப்பதன் காரணம் பற்றி தான் ஆய்வு செய்வதற்காகச் சில பெண்களை அணுகியபோது, அப்படி பிரச்சினைகளெதுமில்லை. 'நீங்கள் தான் இப்படி ஒவ்வொன்றைத் தோற்றுவிக்கிறீர்கள்' என அவர்கள் குறைகூறியதாகவும் தெரிவித்தாள்.

பெண்கள் முற்காலம் போலன்றி கல்விகற்கிறார்கள், உயர்கல்வி பெறுகிறார்கள், வேலைக்குச் செல்கிறார்கள், வாகனங்கள் ஓட்டுகிறார்கள், அவர்கள் முன்னேறிவிட்டார்கள் இதுதான் பலரது கருத்து.

இதெல்லாம் எப்படி ஏற்பட்டது? பாரதி பாடிய கும்மிப் பாட்டும் பலரும் கொடுத்த குரல்களும் சமுதாயத்தையே மாற்றி விட்டதா? இருக்கலாம். அப்படியானால் அதே குரல்கள் இந்த சீதனத்தையும் மாற்றியிருக்கலாமே.

இன்று ஒரு பெண்ணை வைத்தியநிபுணராகப் பயிற்றலாம். அதன் பின் அதேபோலப் பயின்ற ஒரு ஆணை மணம்புரிய அவள் எத்தனை இலட்சங்கள் கொடுக்கவேண்டும் தெரியுமா?

ஏனென்றால் அந்த ஆணைப் படிப்பிப்பதற்கு செலவு செய்த பணம் என்கிறார்கள். பெண்ணைப் படிப்பிப்பதற்குச் செலவில்லையா? ஆண்களைத் திருமணம் செய்ய தொழில் ரீதியாக சீதனத் தொகை கூடுகிறது. பெண்களில் அதிக சம்பளம் பெறுபவளுக்கு சீதனத்தைக் குறைக்கவாவது செய்கிறார்களா? இல்லையே, அப்படியிருக்கும்போது பெண்களின் நிலை எதனால் மாறியது?

சூழ்நிலையால் மாறியது என்று கூறலாம். முக்கியமாக பணத்தேவையால் மாறியது என்று தான் கூறவேண்டும். வீட்டில் பெண்பிள்ளையும் தொழில் செய்து சம்பளம் பெற்றால் நல்லது என்று கருதினார்கள். எனவே கல்வி கற்க அனுமதித்தார்கள். தொழில் புரிய அனுமதித்தார்கள். ஆனால் சீதனம் பணம் கிடைக்கும் விடயமாயிற்றே. எனவே அதை மாற்ற அவர்கள் விடவில்லை.

இப்பொழுது எம்முன் நிற்கும் பல பிரச்சனைகள் ஆழமாக வேரூன்றியவை. அவற்றை ஆணிவேருடன் சாய்த்து அழிக்க வேண்டிய பொறுப்பிருந்தும் அப்படி ஏதுவுமில்லை என்ற மாயையில் நாம் வாழ்ந்துகொண்டு மற்றவர்கள் அப்படிப்பிரச்சனைகளிருப்பதாகத் தவறாகக் கருதுகிறார்கள் என்று சொல்வது முதலில் மாறவேண்டும். எங்களது பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவை எப்படி வேரறுக்கப் படவேண்டுமென்பதைத் திட்ட மிட்டு செயற்படுத்தவேண்டும்.

இதற்கு முதற்படியாக எங்கள் மனங்களைப் பக்குவப் படுத்தவேண்டும். நான் உனக்குக் கடிதமாக எதையும் எழுதலாம். ஆனால் செயற்படுத்தும்போது அது இலகுவாக இருக்காது. சிந்தி, செயற்படுத்தவும் எமக்கு அதிகாரம் தேவை.

அன்புடன்,
யோசி.




## பூண்டுக்குழம்பு

தேவையான பொருட்கள்

தக்காளிப்பழம் - 5, பெரிய வெங்காயம் - 2 பூண்டு (15 பல்), மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி , நல்லெண்ணெய் - 2 மேசை க்கரண்டி, உப்பு - தேவையான அளவு

செய்முறை :;

ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் ஊற்றி அதில் தக்காளிப் பழங்களை பொடியாக நறுக்கிப் போட்டு கையால் பிசைந்து, மிளகாய்த்தூள், மஞ்சள், உப்பு ஆகியவற்றை போட்டு வைக்கவும். வெங்காயம், பூண்டு ஆகியவற்றைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும். எண்ணெய் காய்ந்ததும் நறுக்கி வைத்த பூண்டு, வெங்காயத்தைப் போட்டு சிவக்க வதக்கவேண்டும். நன்றாக வதங்கியதும் தயாராய் வைத்துள்ள தக்காளிக் கலவையை ஊற்றவேண்டும். தக்காளிக்கலவை நன்றாகக் கொதித்ததும் இறக்கி வைக்க வேண்டும். இந்தக் குழம்பில் கறி உருண்டைகளைப் போடவேண்டும் இந்தக் குழம்பைச் சுடச்சுடச் சோற்றில் ஊற்றி பிசைந்து சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

கறி உருண்டை மட்டும்போதும் என்றால் முட்டையில் வெள்ளைக் கருவை அடித்து அதில் உருண்டைகளை ஒவ்வொன்றாகப் போட்டுஎடுத்து எண்ணெயில் பொரித்து எடுத்துக் கொள்ளவேண்டும். இதை விருந்துகளில் பரிமாறலாம். மாலைச் சிற்றுண்டியாகவும் சாப்பிடலாம். இது போல பூண்டுக் குழம்பையும் தனியே பயன்படுத்தலாம்.



# துணைவா! துணை வா!

இனிய கானங்கள் காற்றில் கலக்க
விடியலின் சலசலப்புக்கள் மனதில் ஒலிக்க
பின் தூங்கி முன்னெழுந்து
காலை இளம் பரிதியை முத்தமிட்டு
வாசல் மண்ணை கோலத்தினால் முத்தமிட்டு
உன் தலை வருடியும்
படுக்கையில் நின்றும் விழிக்க முத்தமிட்டும்
அன்புக் கரத்தால் உணவளித்தும்
உன் கடமை முடித்தும் .........

என் சின்ன சின்ன ஆசைகளை
நீர்க்குமிழிக் கனவுகளை
நீ செவி மடுக்காததன் மாயம் என்ன?
மனமே!
நான் உனக்கும் உன் தேவைகளிற்கும்
கவர்ச்சிக்கும் இன்பத்திற்கும்
அடுப்புக்கும் விளம்பரத்திற்கும் - மட்டும
உரியவள் அல்ல!



சமூகத்தின் சேவைக்கும்
சமூக விடுதலைக்குமுரிய கொற்றவை!
நெற்றியில் உன் குருதியை பதித்து
கழுத்தில் உன் அதிகாரத்தை முடிச்சிட்டு
கைவிரலில் உன் நாமத்தை தீட்டி
முழுமையில் எனை மறந்து போர்வையாக்
உனக்குரியவளாக்கிக் கொண்டாய்!
நான் வாழ வேண்டிய பறவை
பறந்து இனிய கீதங்கள் இசைக்க வேண்டியவள்
உன்னைப் போல் என்னையும் நேசி
சிறகொடித்து இன்புறாதே!
இனியும்
என்னை விலங்கிடாதே!
துணைவா!
நீ மெய்த் துணைவானால்
எனக்காகத் துணைவா!





துஷாந்தினி

# முகத்திற்கு ஒப்பனையிடல் (FACE MAKE UP)



☆ முதலில் தலையை நன்கு வாரி ஓர் கொண்டை போட்டுக் கொண்ட பின்பு, தலைமுடி எதுவும் வெளியே தெரியா வண்ணம் ஓர் தூய்மையான துணியால் தலையைச் சுற்றிக் கட்டிக் கொள்க.

☆ முகத்திற்க்கு சவற்காரமிட்டு நன்கு கழுவிக் கொண்ட பின்பு, தூய்மையான துவாயினால் நன்றாகத் துடைத்துக் கொள்க.

☆ பின்பு முகப்பரப்பு முழுவதற்கும் கிளென்சிங் கிறீம் (**Cleancing Cream**) பஞ்சிலெடுத்து அழுத்திப் பூசிக் கொண்ட பின் 5 நிமிடங்கள் கழித்துப் பிறிதொரு பஞ்சினால் நன்றாக அழுத்தித் துடைத்துக் கொள்க.

☆ இதற்குப் பதிலாக ஒருமேசைக் கரண்டி முட்டை வெண்கரு நுரை டன் மூன்று துளிகள் தேசிப்பழச் சாறும் கலந்தும் மேற்கூறிய முறையில் செய்து கொள்ளலாம்.

☆ பின்பு 1/4 தேக்கரண்டி பௌண்டேசன் கிறீம் (**Fountation Cream**) ஐ உள்ளங்கையிலெடுத்து, மூன்று துளிகள் தண்ணீரைச் சேர்த்து ஓர் விரலால் நன்றாகச் சேர்த்துக் கொண்டபின்பு முகம் முழுவதற்கும் பரவலாகப் புள்ளிகளாக இட்டுக் கொண்டு, ஓர் ஈரலிப்பான பஞ்சினால் உடனடியாக அழுத்தித்துடைத்துக்கொள்க.

☆ பின்பு பிங்பவுடர் (**Pink Powder**) ஐப் பஞ்சிலெடுத்து முகம் முழுவதும் பரவலாகப் பூசிக் கொண்ட பின்பு, ஓர் மேக்கப் பிறஸ் (**Make up brush**)கொண்டு பவுடரைச் சீராக்கிக் கொள்க.

பிங்பவுடருக்கு பதிலாக பான் (**Pancake**) ஐயும் பயன்புடுத்திக்கொள்ளலாம்.

☆ பின்பு கன்னத்தின் இரு புறமும் பிங்கலர் (**Pink**) விரலிலெடுத்து, இரண்டு கன்னக் கதுப்புகளிற்கும் உட்புறமிருந்து காதோரம் நோக்கி **Rough** ஐ மெதுவாகப் பூசிக் கொண்டு பிறஷ்ஷால் (**brush**) சீர்படுத்துக.

# உடல் பருமனானவர்களே கவலை வேண்டாம்!



மிகவும் பருமனாக இருப்பது ஆரோக்கியமானதல்ல. அளவுக்கு அதிகமான கொழுப்பு, இரத்த அழுத்தம், இருதயநோய், பாரிச வாதம், பித்தப் பைக்கல், நீரிழிவு, கைகளிலும் கால்களிலும் மூட்டு வலி மற்றும் பல கோளாறுகள் ஏற்பட காரணமாகிறது.

பருமனானவர்கள் எடையைக் குறைக்க சில வழிகள்.

1. எண்ணெய்ப்பதார்த்தம், கொழுப்பு உணவுகளைச் சாப்பிடக்கூடாது.
2. சர்க்கரை இனிப்புப் பண்டங்களை உண்ண வேண்டாம்.
3. அதிக தேகப்பயிற்சி செய்தல் வேண்டும்.
4. அதிக பழங்களையும் காய்கறிகளையும் சாப்பிடல் வேண்டும்.
5. எடையைக் குறைக்க இப்போது சாப்பிடுவதில் பாதியைச் சாப்பிடுங் கள்.

இவ்வாறு சில வழிகளை நாள்தோறும் கடைப் பிடித்து வருவீர்களாயின் உங்கள் உடல் பருமன் என்ற கவலை நீங்கி விடும். உங்கள் உடல் ஆரோக்கியமானதாகவும் அழகானதாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை.

இதனால் நீங்கள் விரும்பும் உடைகளை அணியக் கூடியவராக திகழ்வீர்கள். அதுமட்டுமன்றி சுறுசுறுப்பானவர்களாகவும் ஓடி ஆடி வேலைகளை செய்யக்கூடியவராகவும் திகழ்வீர்கள்.



# உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற தேசியமகளிர் மாநாடு

தமிழர் தாயகத்தின் கிளிநொச்சி மாநகரிலே அரசறிவியல் கல்லூரி மண்டபத்தில் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் 2 ஆம் லெப். மாலதியின் 15 வது ஆண்டு நினைவு நாளையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு கடந்த மாதம் 28,29, 30 ஆகிய மூன்று தினங்களாக தேசிய மகளிர் மாநாடானது வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளான திருகோணமலை, அம்பாறை,வவுனியா,மன்னார்,முல்லைத்தீவு, மட்டக்க ளப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் 500 இற்கு மேற் பட்ட பெண்கள் கலந்து கொண்டார்கள். அவர்களில் பெரும்பாலானோர் சமூகத் தொண்டர்கள், மாதர்சங்கத் தலைவிகள், மற்றும் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பெண்கள் மேம்பாட்டு நிறுவன அங்கத்தவர்கள் போன்றோர் கலந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

முதல் நாள் நிகழ்வில் பொதுச்சுடர் தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்ப மாகி மூன்று அமர்வாக மூன்று நாட்கள் இந் நிகழ்வு நடைபெற்றது.முதல் நாள்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி மாநாட்டின்நோக்கம், குறிக்கோள் பற்றி உரையாற்றினார். மூன்று நாட்களிலுமே காலை 9 மணிக்கு மாநாட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது, இதில் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்து வந்திருந்திருந்த பெண்களை மூன்று பிரிவுகளாக பிரித்து நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மூன்றுநாட்களிலும் கலந்து கொண்ட மாவட்டப் பெண்களின் ஓட்டு மொத்தமான பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகள் வாசிக்கப்பட்டு ஆராயப்பட்டன. ஆராயப்பட்ட பிரச்சினைகளுக் கான தீர்வுகளையும் கூறினார்கள்.

பொதுவாக அவர்கள்முன்வைத்தபிரச்சினைகள் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவயதுத் திருமணவிளைவு, வெளி நாடுகளிற்கு வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சினைகள், மதுபானத்தால் மூடநம்பிக்கைகளால் இராணுவத்தால், கல்வியறிவின்மையால் பொருளாதாரப் பின்னடைவினால், சீதனத்தால் பாலியல் வல்லுறவால் ஏற்படும் பிரச்சினைகள் கலாசார பண்பாடு பற்றிய சமூக கருத்துருவாக்கங்கள், உயர்கல்விப்படிப்பில் நாட்டம், சமதொழில், ஊதிய வேறுபாடு, பால்வேறுபாடு, சமூக, சாதி, சமய வேறுபாடுகள், விதவைகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வந்திருந்த பெண்கள் தாம் மாநாட்டிற்கு வந்தபடியினால் சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறோம் என்று பெருமிதத்துடன் கூறினார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறியதன் காரணம் இராணுவ கட்டுப் பாட்டுப் பகுதிகளில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள், வடுக்களின் வெளிப் பாடாகும்.

இறுதி நிகழ்வில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் பேசுகையில் - போராட்ட கால சூழ்நிலைகளில் மிகவும் பாதிப்புக்குள்ளாபவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். இதைவிட பெண்ணியம் பற்றிய கருத்துக்களோடு நின்று விடாது முன்னேற்றகரமான செயற்பாட்டின் மூலம் இறங்க வேண்டும். அது பெண்களாகிய உங்களிடம் தான் உள்ளது. இது உங்களின் காலம். நீங்களே பலமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

இறுதி நாள் நிகழ்வில் பல நாடகங்கள் மேடையேற்றப் பட்டன. இதில் பெண்கள்படும் அவலம், "வீரத்தாய்" போன்ற நாடகங்களும் அடங்கும். .இதைவிட கிளிநொச்சி மாவட்டத தினரின் எங்கள் "வாழ் வும் எங்கள் மண்ணும் " என்ற கவியரங்கமும், முல்லை மாவட்ட கலைஞர்களின் கலை நிகழ்வுகளுடன் மாநாடு இனிதாக நிறைவடைந்தது.

தர்மேந்தினி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அமைதி என்பது ஒவ்வொருவனதும் உள்ளத்திலிருந்துதான் முதலில் ஆரம்பமாகின்றது.
-மார்ஷல் ரதபோர்ட்

# நமது நோக்கு

## அமைதிக்கான இறுதிச்சந்தர்ப்பத்தை குழப்ப முயலாதீர்!

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் வீசேட அதிரடிப்படையினரின் அட்டகாசம். இன்றும் தொடர்கதையாகி வருகின்றது.

தங்கவேலாயுதபுரம், வீரமுனை எனத் தொடங்கி இன்று காஞ்சிரங்குடா வரை இரக்கமேயில்லாத வகையில், மிலேச்சத்தனமாக நடந்துகொள்ளும் அதிரடிப்படையின் செயல்கள் - சமாதானத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் நிலைக்குக் கொண்டுசெல்லும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது.

தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட முறையில் உருவாக்கப்பட்ட வீசேட அதிரடிப்படையினர் - யுத்த காலத்தில் மட்டுமல்லாது, சமாதானம் உருவான பின்னரும் கூட பொதுமக்களைத் துன்புறுத்தியும், போராளிகளை அவமதித்துமே வந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஏழுக்கும் அதிகமான பொதுமக்களைப் பலிகொண்ட செயலுக்குப் பொறுப்பான காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த படையினர் - ஏற்கனவே பல தடவைகள் பொது மக்களைத் துன்புறுத்தி வந்தார்கள் என அங்கிருநது கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் தொடர்ச்சியே நேற்றுமுன்தினம் புலிகளைத் தாக்கிய சம்பவமும், நீதி கேட்டுச் சென்ற மக்கள்மீது இரவில் நடாத்தப்பட்ட தாக்குதலுமாகும்.

வேண்டுமென்றே இரண்டு புலிகளைத் தாக்கியும், நிராயுதபாணிகளாக நின்ற மக்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டுப் படுகொலை செய்ததன் மூலமும், சம்பவம் நடந்த இடத்திற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோ, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரோ செல்வதைத் தடுத்ததனாலும்- புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அதிரடிப் படையினர் அப்பட்டமாக மீறியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் நடைபெற்ற மிகப் பாரதூரமான ஒப்பந்த மீறல் காஞ்சிரங்குடா சம்பவமாகும்.

இச்சம்பவங்களின் தாக்கமானது வெறுமனே அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைகளுடன் மாத்திரம் நின்று விடவில்லை. சமாதானத்தின் பேரிலும், அரசாங்கத்தின் மீதும் தமிழ்மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சிதறடிப்பதாகவே இச்சம்பவங்களைக் கருத வேண்டியுள்ளது.

அரசாங்கம் சமாதானத்தின் மீதான தனது அக்கறையை வெறுமனே சொல்லிக் கொண்டிருப்பதால் மட்டும் இனப்பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. தான் சொல்லுபவற்றை செயல்களில் காட்டவும், தனது கட்டுப்பாட்டினுள் இயங்கும் படையினரை சமாதானத்துக்கான பாதையில் கொண்டு செலுத்தவும், கட்டுப்படுத்தவும் வேண்டிய பாரிய பொறுப்பை அரசாங்கம் உதாசீனம் செய்துவிடமுடியாது.

இல்லையேல் - இன்று காஞ்சிரங்குடாச் சம்பவம் போல, நாளை இதேபோன்ற சம்பவங்கள்தொடர்கதையாகி - மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் சமாதானச் சூழலை அழித்தொழிப்பதாகவே ஆகிவிடும்.

இத்தகைய நிலை தோன்றுவதைத் தடுக்க வேண்டுமாயின் படையினரின் தொடரும் அடாவடித்தனங்களையும் மீறல்களையும் கட்டுப்படுத்துவதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகமான படை முகாம்களை அகற்றி, சுமுகமான சூழலொன்றை வடக்கு - கிழக்கில் உருவாக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள்ளது.

இந்த வகையில் காஞ்சிரங்குடா சம்பவத்தை சமாதானத்திற்கான அச்சுறுத்தலின் இறுதி எச்சரிக்கையாகக் கொண்டு - அரசாங்கம் செயற்படுவதே இலங்கைத் தீவில் அமைதியைக் கொண்டு வரும் கடைசிச் சந்தர்ப்பத்தை இறுகப் பற்றிக் கொள்வதாகவும் இருக்கும்.

### வட-கிழக்கு இடைக்கால நிர்வாகம்

# புலிகளிடம் கையளிக்கப்பட்டால் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

**ஜனாதிபதி செயலகம் கூறுகின்றது -**

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுமானால் அங்கு வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதனைத் தடுக்க முடியாது என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துத் தாம் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருக்கும் தெரியப்படுத்தி வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன் அவர்களின் மனித உரிமை, ஜனநாயகம் பாதுகாக்கப்படவும் வேண்டும் எனவும் குறிப்பிடப்படவும் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மக்களுக்கு தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் குழப்பநிலை குறித்து ஜனாதிபதி செயலகம் கவனம் செலுத்தி வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டோர்

யாழ் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு 2002/2003 கல்வி ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. உடற்கல்வி டிப்ளோமாவுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

எப்.ஆண்டலிமா, கி.அன்றுகிறேசின், கே.பாலமுகுந்தன், கே.றொசானி, கே.டினேஸ், எஸ்.இளங்கோவன், எ.இம்மானுவல் பெர்னான்டோ, பி.யசிந்தா, எவ்.யூட்தேவராஜ், கே.கோமதி, எ.கின்சிலிமேரி பரினாபிலேடானோ, ஆர்.கிஸ்ணகுமார், ஆர்.கோபேட்சாம்சன், ஆர்.கோமாலா, ஜே.குலகந்தன், எஸ்.லெட்சுமி, வி.லோகேஸ்வரன், கே.மகிந்தன், கே.மனோகரன், எஸ்.மேரிஅல்போன்சா, எஸ்.மயூரன், எல்.மெலான், அஞ்சலிற்றோ பீரிஸ், கே.மோகனராஜ், எ.முகுந்தன், எஸ்.முகுந்தன், வி.முகுந்தன், கே.நாகேஸ்வரன், வி.நகுலேந்திரன், சி.நிரோசினிகுலாஸ், சி.நிதர்ஷன், எ.பிரபாகரன், பி.ரதிதேவி, எஸ்.ரூபவாயினி, என்.ருக்மணி, எக்ஸ்.சாந்தன், என்.சாந்தரூபன், ரி.சசிதரன், எஸ்.சதிஸ்கண்ணா, வை.சிறிசோபனா, எம்.சுமலதா, எஸ்.சுரேந்திரா, எஸ்.ஜோகேஸ்வரன், பி.தர்சினி, பி.தயாளினி, கே.திலேகேஸ்வரி, எ.தோமஸ்குலஸ், எஸ்.உதயன், எ.வாமதேவன், எம்.வசந்தன், ஜே.விஜயந்தி. (65)

# மந்திகை வைத்தியசாலையில் எக்ஸ்ரே இயக்குநர் இல்லை

### நோயாளர்கள் பெரும் சிரமம்

(வடமராட்சி)

மந்திகை மருத்துவமனையின் எக்ஸ்றே பிரிவு கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக செயலிழந்துள்ளது.

எக்ஸ்றே பிரிவின் இயக்குநராகக் கடமையாற்றிய ஊழியர் விடுமுறையில் சென்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடம் இது வரை நிரப்பப்படவில்லை.

எக்ஸ்றே பிரிவு இயங்காமையினால் வைத்தியசாலைக்கு சிறு விபத்துச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று எக்ஸ்றே எடுக்கப்படுகின்றனர்.

சிலவேளைகளில் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நீண்டநேரம் காத்திருக்கவேண்டியும் திருப்பி அனுப்பப்படும் நிலையும் ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படும் நோயாளர் எக்ஸ்றே எடுத்த பின்னர் மந்திகை மருத்துவ மனையிலிருந்து அம்புலன்ஸ் வரும்வரை வைத்தியசாலையில் தவமிருக்க வேண்டியுள்ளதாக நோயாளர் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் எக்ஸ்றே பிரிவு இயங்காமையால் நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்ப வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

யாழ்.குடாநாட்டிலே இரண்டாவது தரத்திலுள்ள ஒரு ஆதார வைத்தியசாலையில் எக்ஸ்றே பிரிவுக்கு ஒருவரை நியமிப்பதில் அதிகாரிகள் அசமந்தமாக இருப்பதாகப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (23)

# மல்லாகத்தில் மாணவிகளுடன் சேட்டை விட்ட இளைஞர்குழு நையப்புடைக்கப்பட்டது!

(சிறுப்பிட்டி)

மல்லாகம் பகுதியில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளுடன் தகராறு செய்த இளைஞர் குழுவொன்று பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் தனியார் கல்வி நிலைய மாணவிகளுடன் சேட்டை விட்ட இளைஞர் குழுவே பொதுமக்களால் கடுமையாகத் தாக்கி விரட்டப்பட்டனர்.

குடாநாட்டில் பெண்கள் மீதான இத்தகைய சேட்டைகள் அதிகரித்து வந்துள்ள நிலையில் சமீபத்தில் சமூகக் குழுக்கள் அமைக்கப்பட்டு குறிப்பிட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்கள் மீண்டும் அத்துமீறல் வடமராட்சி மீனவர்கள் முறையீடு

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீன்பிடி றோலர்கள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாக மீனவர்கள் சார்பில் புகார் செய்யப்படுகின்றது.

அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபடும் இந்திய றோலர்கள் வடமராட்சிக் கடற்பரப்பில் கரையை அண்டிய பகுதிகளில் நெருங்கித் தொழிலில் ஈடுபடுவதுடன் மீனவர்களால் போடப்பட்ட வலைகளை வெட்டிவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக குறைந்திருந்த இந்திய றோலர்கள் அட்டகாசம் கடந்த சில தினங்களாக மீண்டும் அதிகரித்துள்ளதாக மீனவர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக வரும் றோலர்கள் கடற்றொழிலாளர்களை அச்சுறுத்துவதுடன் வலைகளை அறுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கடற்றொழிலுக்கு செல்லும் கடற்றொழிலாளர்கள் செல்ல முடியாது திரும்பி வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுவது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (23)

# ரோந்துப் படகில் இருந்து தவறிவிழுந்த கடற்படைச் சிப்பாய் சடலமாக மீட்பு!

தலைமன்னார் கடற்பரப்பில் காணாமல் போன கடற்படை வீரரின் சடலம் எலும்புக்கூடாக வேலணை கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது கடந்த யூலை மாதம் 26ஆம் திகதி தலைமன்னார் கடற்பரப்பில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த வேளை கடலில் கடற்படை ஒருவர் தவறி வீழ்ந்ததாகவும் தேடுதல் நடத்தியும் மேற்படி வீரரை கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்படவே கடற்படையினர் கைவிரித்துவிட்டனர்.

வேலணைக் கடற்பரப்பில் துப்பரவுப்பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டதென்றும் அதில் கடற்படையினரின் சீருடையும் இடுப்புப்பட்டியும் இருப்பதை அவதானித்து பொலிசாருக்கு கொடுத்த தகவலையடுத்து அங்குவந்த பொலிசார் மற்றும் ஊர்காவற்துறை மேல் நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டதுடன் எலும்புக்கூட்டை பகுப்பாய்வுக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டனர். (68)

# பள்ளிக்குள் வரும் பிள்ளைகளின் கல்விக்கு முழுப்பொறுப்பும் ஆசிரியர்களே

*பிரபல சிறுகதை, நாவல் எழுத்தாளரான தெணியான் ஆசிரியப் பணியில் நீண்ட காலம் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவர். தனது ஆசிரியப் பணிக்கால அனுபவங்களைக் கொண்டு இன்றைய மாணவர்களின் நிலை குறித்து விபரிக்கிறார்.*

**இன்று பள்ளி செல்லும் எமது பிள்ளைகளின் கல்விக்கு யார் பொறுப்பு?**

இப்படியொரு கேள்வி கொஞ்சமும் பொருத்தமற்றதாகவே நம்மில் பலருக்குத் தோன்றக்கூடும். பள்ளி செல்லும் பிள்ளைகளின் கல்விக்கு வேறு யார்தான் பொறுப்பு. ஆசிரியர்கள் தான் என்றே பெரும்பாலும் பலரும் சொல்லிவைக்கப் பார்ப்பார்கள். உண்மையில் நமது பிள்ளைகளின் கல்விக்கு யார் இன்று பொறுப்புடையவராக இருக்கின்றார் என்பதனை நோக்கு வதற்கு முன்னர் கடந்த காலத்தை ஒரு தடவை திருப்பிப்பார்க்க வேண்டியது அவசியமாகின்றது.

நாற்பது, ஐம்பதுகளில் பாடசாலைக்குள் ஒரு மாணவன் முதன் முறையாகக் காலடி எடுத்து வைக்கும் நிகழ்வு பெரிய விழாவாகக் கொண்டாடப்பெற்றது. பெற்றோர் தமது தகுதிக்கேற்ப ஏடு தொடக்கும் அந்த வைபவத்தை பாடசாலையிலும் அதன் தொடர்ச்சியாக வீடுகளிலும் கொண்டாடினார்கள். நவராத்திரிப்பூசைகள் முடிந்து விஜயதசமியன்று அல்லது தைப்பூசத் திருநாளில் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கி வைக்கப்படும். அதன் பின்னர் ஜனவரியில் பாடசாலை புதிதாக ஆரம்பிக்கும் போது ஐந்து வயது பூர்த்தியடைந்த மாணவன் தனதுகல்வியை ஆரம்பிக்கின்றான். அக்காலத்தில் முதல் வகுப்புக்குரிய கல்வி இரண்டு ஆண்டுகள் மாணவனுக்குப் போதிக்கப்பட்டது. முதலாம் ஆண்டுக்குரிய வகுப்பு அரிவரி அல்லது சின்ன முதல் என்றும் இரண்டாம் ஆண்டுக் குரிய வகுப்பு பெரியமுதல் எனவும் அழைக்கப் பெற்றன. அரிச்சுவடியை ஆரம்பிக்கும் கல்வி அரிவரி எனப் பட்டது. முதல் வகுப்பில் சின்னது அல்லது சிறியது சின்னமுதல் எனவும் முதல் வகுப்பில் பெரியது பெரிய முதலெனவும் அர்த்தத்துட னேயே அக்காலத்திற் பெயர்கள் சூட்டப் பெற்றிருக்கின்றன.



தெணியான்



இந்த இரண்டு வகுப்புக்களையும் ஈராண்டுகள் படித்து முடித்த ஒரு மாணவன் மூன்றாவது ஆண்டு இரண்டாவது வகுப்புக்குப் போய்ச் சேருவான். எனவே முதலாம் வகுப்புக்குரிய கல்வி அக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் மாணவன் கற்க வேண்டியவனாக இருந்தான். அவனுடைய இக் கல்விக்கு-கல்வியின் ஆரம்பத்துக்கு உரிய முழுப் பொறுப்பும் பாடசாலை ஆசிரியரையே சேரும். பாடசாலை ஆசிரியரை எதிர்பார்த்தே மாணவன் பாடசாலைக்குள் வந்தான். ஆசிரியர் தனது பொறுப்பைத்தட்டிக்கழிக்க இயலாத ஒருவராக இருந்து வந்தார்.மாணவன் பாடசாலையிலே தனக்குக் கற்பிக்கும் ஆசிரியரைத் தவிர்த்து இன்னொருவரைத் தனது குருவாகக் கொள்ளும் நிலைமை அவனுக்கில்லாதிருந்தது.

இன்னும் மாணவன் தனது முதலாம் வகுப்புக்குரிய கல்வியை இரண்டு ஆண்டுகள் கற்கின்றான். மாணவர்கள் சிலர் இக் கல்வியை மூன்று ஆண்டுகள் கற்று முடிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையும் சில இடங்களில் இருந்து வருகின்றது. பாடசாலைகளில் முதலாவது வருடம் முதலாம் வகுப்புக் கல்வியையும் இரண்டாவது வருடம் இரண்டாவது வகுப்புக்குரிய கல்வியையுமே மாணவன் பெறுகின்றான். முதலாம் வகுப்புக்குரிய முதல்வருடக் கல்வி(சின்னமுதல்) பாடசாலைக்கு வெளியிலேயே மாணவனுக்குப் போதிக்கப்படுகின்றது. பாடசாலைக்கு வெளியிலுள்ள பாலர்களுக்கான கல்விக் கூடங்கள் 'நேசரிகள்' என அழைக்கப்படுகின்றன. நேசரிகள் என அழைக்கப்பெறும் இந்தப் பாலர் பாடசாலைகளிலே தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட பின்னரே மாணவன் பாடசாலைக் கல்வியை நாடி வருகின்றான்.

பாடசாலையில் முதலாம் வகுப்பிற்குரிய கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர், மாணவன் பாலர் பாடசாலையில் கற்றுவிட்டு வருகின்றான் என எதிர்பார்க்கின்றார். கற்றுவிட்டு வரவேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார். முதலாம் வகுப்பிற் கற்கும் மாணவன் ஒருவனிடத்தில் பின்னடைவு காணப்பெற்றால், அவன் நேசரியில் ஒழுங்காகக் கற்கவில்லை, அல்லது நேசரிக்கு அவன் போகவில்லை என, பாலர் பாடசாலை மீது அல்லது அவன் மீது குற்றம் சுமத்துகின்றார். இவ்வாறு குற்றஞ் சுமத்துவதற்கான வாய்ப்பு இன்றைய கல்வி அமைப்பு மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த வாய்ப்பானது முதலாவது வகுப்பில் மாணவனது ஆரம்பக் கல்விக்கான முழுப்பொறுப்பினையும் ஆசிரியர் ஏற்றுகொள்ளாது தப்பித்துக் கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிவிட்டுள்ளது. பாடசாலையில் பிள்ளையின் கல்விக்குரிய பொறுப்பு, பாடசாலைக்கு வெளியே இருக்கும் இன்னொருவரிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

மாணவனின் முதலாம் வகுப்பில் ஆரம்பிக்கும் ஆசிரியரின் பொறுப்பின்மை, மாணவன் மேலே செல்லச் செல்லத் தொடர்ந்து சென்று கொண்டு இருக்கின்றது. அந்தத் தொடர்ச்சியின் வெளிப்பாடு தான், "மாணவன் ரியூட்டரிக்குப் போவதில்லை என்பதும், ரியூட்டரியில் ஒழுங்காகப் படிக்கவில்லை" என்பதுமாக வளர்ந்து கொண்டு செல்கின்றது.

பள்ளிக்குள் வரும் பிள்ளைகளின் கல்விக்கு முற்றுமுழுதான பொறுப்பினை ஏற்கவேண்டியவர்கள் பாடசாலை ஆசிரியர்களே. ஆசிரியர்கள் இதனை உணர்ந்து கல்வி கற்பிக்க முற்படும்போது மாணவர்களின் பல கல்விப் பிரச்சனைகள் தாமாகவே தீரும். இதனை ஆசிரியர்கள் கவனத்திற் கொண்டு தமது பணியினைச் செய்தல் வேண்டும்.

## யாழ்.மாவட்டத்தில் கல்வி, மீன்பிடி, சுகாதாரம்

# ஜப்பானிய சர்வதேச ஸ்தாபனம் அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவும்

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபனம் யாழ். மாவட்டத்தில் பல் துறைசார்ந்த செயற்திட்டங்களிற்காக உதவி வழங்கவுள்ளது.

கல்வி, சுகாதாரம், மீன்பிடி ஆகிய துறைகளில் புதிய செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மேற்படி நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்படவுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த மேற்படி நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழு யாழ். அரசாங்க அதிபர் அலுவலகத் தில் அரச அதிபரைச் சந்தித்தனர். இச்சந்திப் பின்போது மேற்படி துறைசார்ந்த செயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குடாநாட்டின் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகளை பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் குறித்தும் , குடாநாட்டில் ஐஸ் உற்பத்தியை மேற்கொள்வதற்கு வேண்டிய செயற்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார வைத்திய வசதிகள் தொடர்பான செயற்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. யாழ். போதனா மருத்துவமனையை நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றுவது பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இவற்றை விட ஏனைய மருத்துவமனைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. (க)

# சட்ட விரோத மின் பாவனை பாலகனைப் பலி கொண்டது

(தாவடி)

சட்டவிரோதமாக மின்பெறுவதற்காக கொழுவப்பட்டிருந்த கம்பியில் தொட்ட பாலகன் பரிதாபகரமாக மரணமடைந்த சம்பவம் ஒன்று தாவடியில் நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 6மணியளவில் விளையாடச் சென்ற சிவனேசன் டான்சன்(வயது4) மின் பெறுவதற்காக இருந்த வயரை தொட்டபோது மின்தாக்கி அவ்விடத்திலேயே பாலகன் மரணமடைந்தான். இரவு தொலைக்காட்சி பார்ப்பதற்காக சட்டவிரோத மின்சாரம் பெறப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

முன்னரும் இவ்வாறு சட்டவிரோத மின் இணைப்புக் காணப்பட்டபோது தாம் அதை துண்டித்து விட்டு சென்றிருந்ததாக மின்சார சபையினர் தெரிவித்தனர்.

# புனரமைப்புப் பணியில் ஜி.ரி.சட். தொடர்ந்தும் ஈடுபடும்!

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளது.

மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதரக அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது.

யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனுடன் இக்குழுவினர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

யாழ்.நகரின் கரையோரக் கிராமங்களும், தென்மராட்சிப் பகுதியும் கடந்த 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்பகுதிகளில் உடனடியாகப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்காகப் புதிய செயற்திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. அதேபோன்று ஏனைய பகுதிகளில் மேற்படி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் குறித்து ஒரு மீளாய்வைச் செய்யவிருப்பதாகவும் மேற்படி குழுவினர் தெரிவித்தனர்.(க)

# பலாலி ஆசிரியர் கலாசாலையில் தளபாடங்களுக்குப் பற்றாக்குறை

(ஊரெழு)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தளபாடப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.இவ்வருடம் வழமையான பாடநெறிகளுடன் ஆரம்பப் பிரிவுக்கு 150 மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனால் மேற்படி கலாசாலையில் தளபாடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக கலாசாலை அதிபரினால் உயர்கல்வி அமைச்சுக்கு எடுத்துக் கூறியதுடன் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறும் கோரப்பட்டுள்ளது. (96)

# அச்சுவேலிப் பகுதியில் சட்ட விரோத மின் பாவனை!

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் சட்டவிரோத மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இப்பகுதியுள்ள நிரந்தர மின்பாவனையாளர்கள் போதிய வெளிச்சம் இன்றி அவதிப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

சட்ட விரோத மின்பாவனையால் மாலை 6.00மணிமுதல் இரவு 10மணி வரை குறைந்த வருவுடைய மின்சாரமே இப்பகுதிகளுக்கு கிடைக்க கூடிய . நிலை இருந்து வருகிறது. இதனால் இரவில் கல்வி கற்கும் மாணவர் களும், மின் உபகரணங்களை பயன்படுத்துவோரும் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

(88,89,111)

# கலையையும் கடவுளையும் போற்றும் நவராத்திரி விழா

### துர்க்கை பூஜை

'அறிவே சக்தி' ஞானமே பலம் என்பது பெரியோர்வாக்கு. கல்விக்கு நாமகளை வழிபடுவது போல வலிமைக்கு துர்க்கையை வழிபடுகின்றோம்.

அவள் வீரம், தைரியம், பராக்கிரமம் எனப்படும் வலிமைக்கு ஆதி தெய்வம். நமது உடம்பு திடப்பட்டு நாடி, நரம்பு, சதை ஆகியவை உறுதியடைவதற்குத் துர்க்கையை வழிபடுகின்றோம்.

வைணவி, விஜயை, முகுந்தை, சண்டிகை, மாதவி கிருஷ்ணை, நாராயணி, கன்னிகை, காளி, மாயை, ஈசானி, சாரதை, அம்பிகை முதலிய பல திருநாமங்களால் துர்க்கை அர்ச்சிகப்படுகின்றாள்.

கல்விக்குரிய சரஸ்வதிக்கு அறிகுறியாகப் புத்தகங்களையும் ஏடுகளையும் வைத்து வழிபடுவது போல, உடல் வலிமைக்கும் வீரத்திற்கும் திருவுருவமாக விளங்கும் துர்க்கையம்மனின் ஸ்தூல அறிகுறியாக ஆயுதங்களை வைத்து நவராத்திரி விழாவின் கடைசித்தினத்தில் ஆராதனை செய்கிறோம்.

### லட்சுமி பூஜை

நவராத்திரி நாட்களில் நான்கு, ஐந்து, ஆறாம் நாள் இரவுகள் லட்சுமி பூஜைக்குரியவையாகும். உருவமும் நலனும் ஒளியும் சிறந்து அழகாக விளங்கும் ஒன்றைத் 'திரு' என்று சொல்வது வழக்கம். எல்லோராலும் விரும்பப்படும் அழகு பொருந்தியவள் திருமகள்.

அவளே ஆதிலட்சுமி, கஜலட்சுமி, தனலட்சுமி, தான்யலட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, சந்தான லட்சுமி, சௌபாக்கியலட்சுமி என்ற அஷ்டலட்சுமிகளாகக் காட்சி தருகின்றாள்.

சுதந்திரம் சுபீட்சம் போன்றவற்றுக்கும் அவளே அதிதேவதையாக விளங்குகின்றாள்.

### சரஸ்வதி பூஜை

நவராத்திரி நாட்களில். கடைசி மூன்று நாட்களும் சரஸ்வதி பூசைக்குரியது. சரஸ்வதியை நாமகள், கலைமகள், பனுவலாட்டி, காயத்ரி, ஞானமூர்த்தி, உலக மாதா, பிராமி, பாரதி, வாணி, இசை மடந்தை, வெண்தாமரையாள், வாக்காள், மலரவள்தேவி, முதலிய திருநாமங்களால் வழிபடுகின்றோம்.

காயத்ரி என்றால் பாடுபவனைக் காப்பவள் என்றும், பனுவலாட்டி என்றால் நூல்களுக்குரியவள் என்றும் ஞானமூர்த்தி என்றால் அறிவு வடிமானவள் என்றும், பாரதி என்றால் பரதன் என்றும் சான்றோனின் புகழ்ச்சிக்கு உரியவள் என்றும், வாணி என்றாள் சொல்லப் பெறுபவள் என்றும் பெரியோர்கள் பொருள் கூறுகிறார்கள்.

நாமகள் பளிங்கு போன்ற தூய உருவம் கொண்டவள். அவள் சத்துவ குணத்தை வளர்ப்பவள். சத்துவ குணம் உள்ளவர்களே மக்களில் சிறந்தவர்கள். அவர்களுக்குக் கலைமகளின் திருவருளால் ஆயகலைகள் அறுபத்து நான்கையும் உணரும் தனித்தன்மை உண்டாகும். பேசும் நாவும், பாடும் நாவும் நலங்கொள் வாணியாகிய நாமகளின் நல்லருள் பெற்றவையே.

நாமகள் வழிபாட்டின்போது கம்பர் செய்த சரஸ்வதி அந்தாதி, குமரகுருபரர் அருளிய சகலகலாவல்லி மாலை, மாம்பழக்கவிச் சிங்கநாவலர் பாடிய சரஸ்வதி பஞ்சரத்தினம், பழைய பாடலாகிய சரஸ்வதி சிந்தனை முதலிய பாடல்களைத் தமிழர்கள் படிப்பது வழக்கம்.

சரஸ்வதி பூஜை என்பது கல்விக்குச் செய்யும் பூஜையாகும்.

-கவிமாமணி-

## தமிழீழ மகளிர் எழுச்சி நாளில் மகளிர் படையணிகளின் கண்கவர் அணிவகுப்பு





மலர் என்றும் மான் என்றும் சொன்ன புலவர்கள் யாரும் வெஞ்சமர்க் களமாடிய மகளிர் தம் வரியுடை அணிவகுப்பை அகமகிழக் கண்டார் எனில் புயல் வேகம் பாடி புதுவேகம் கொண்டு தம் உவமை உருவகம் பொய்யாயிற்றே என சுய குற்றம் திருத்தி உயர் கவிதை செய்வர். அவரோடு அவர் கவிதை உயிர் வாழும். எம் மண்ணின் வரலாறில் புதுமை வளங்கள் சேரும்.





# அதிர்ஷ்ட வாரம்

**11.10.2002 முதல்**
**17.10.2002 வரை**

### மேடராசி

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் தேகசுகக் குறைவாகவே காணப்படும். உஷ்ணமும் சளி சம்பந்தமான நோய்களும் வரலாம். கற்பனை மிகுதியாலும் வீண் வதந்தியாலும் பயமிகுதி, தொழில் ஸ்தானத்தில் தொழில் செய்யமுடியாத மனநிலை. மாதாவுக்கு சிறிது சுகயீனம், புத்திரர் தேகசுகக்குறைவு, பிள்ளைகளின் திருமணப் பேச்சு தாமதம், குடும்பத்தில் அமைதிக் குறைவு, பிதாவுக்கு சுகயீனம், வார பிற்பகுதியில் தொழில சிறப்பு, புகழ், கௌரவம் முதலியன உண்டாகும். மாணவருக்கு சிறந்த வாரம், வர்த்தகர்களுக்குச் சிறந்த வாரம்.

### இடபராசி

**கார்த்திகை, 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.**

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நற்பலனுக்குரிய வாரமல்ல. வார ஆரம்பமும் இறுதியும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாலும் நடுப்பகுதியில் தேகசுகக்குறைவு பயம் முதலியன உண்டாம். மாதா சுகயீனம், புத்திரர் தேகசுகக் குறைவு, பிள்ளைகளின் திருமணப்பேச்சுக்கு உகந்த வாரமல்ல. சலசம்பந்தமான வியாதி உருவாகலாம். குடும்பத்தில் மகிழ்ச்சிக் குறைவு, பிதாவின் தேக சுகம் நன்று, தொழில் ஸ்தானத்தில் வாரப் பிற்பகுதியில் மகிழ்ச்சி நிலவும், அதிகாரிகளின் மதிப்புக் கிடைக்கும், மாணவருக்குச் சிறந்த வாரம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### மிதுனராசி

**மிருகசீரிடம் 3,4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் மகிழ்ச்சியுடன் கலந்து ஆரம்பிக்கின்றது. பண வரவு, இன்பகரமான மனநிலை, தேகசுகம் நன்று, கணவன் மனைவி மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுவர், மாதாவின் தேக சுகம் நன்று, புத்திரர் மகிழ்ச்சி, பிள்ளைகளின் விவாகப் பேச்சு முன்னேற்றமான நிலையில் இருக்கும், எதிரிகள் தூரே ஒதுங்கி இருப்பார்கள். பிதாவின் தேக சுகம் நன்று, தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், புகழ் முதலியன உண்டாம். மாணவர்களுக்கு திறமையான வாரம். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம். வார இறுதியில் திடீர் மனப்பயம் வரலாம்.

### கர்க்கடகராசி

**புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், அயிலியம்**

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மகிழ்ச்சியுடன் கலந்து ஆரம்பிக்கின்றது. பணவரவு, தேக சுகம் நன்று, வாகனப்பலன் பொது சேவையில் கௌரவம், அறுசுவையுண்டி முதலிய நற்பலன்களுடன் மாதாவின் தேகசுகம் நன்று. புத்திர சுகம் நன்று, விவாகப்பேச்சு முன்னேற்றமான நிலையில் இருக்கும். கணவன் மனைவி மகிழ்ச்சியுடன் காணப்படுவர், பிதாவின் சுபம் நன்று. தொழில்ஸ்தானத்தில் சமமான நிலை, மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### சிங்கராசி

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வார ஆரம்பம் மகிழ்ச்சியுடன் காணப்படாவிடின் நடுப்பகுதி, பிற்பகுதி மகிழ்ச்சியுடன் காணப்படும். தாழ்ந்த நிலை, கவலை, பிரயாணத் தடை, பணவரவு, நோயற்ற வாழ்வு, வாகனப்பலன், மதிப்பு முதலியன உண்டாம். மாதாவின் தேகசுகம் நன்று, புத்திரர் சுகக்குறைவு, விவாகப்பேச்சு தாமதம், கணவன் மனைவி அமைதியுடன் காணப்படுவர். பிதாவின் சுகம் நன்று, தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர்களுக்கு சிறந்த வாரம், வர்த்தகர்களுக்கு சமமான வாரம்.

### கன்னிராசி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இந்த வாரம் நன்மையும் தீமையும் கலந்ததாகவே காணப்படும் பணவரவு, எடுத்த முயற்சி வெற்றி, துணிவு குறைவு, நம்பிக்கை குறைவு, தாழவு மனப்பான்மை, பிரயாணத்தடை முதலிய பலன்களுடன் தாயாரின் தேக சுகம் நன்று, புத்திர சுகம் நன்று, விவாகப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி அமைதியுடன் காணப்படுவர், பிதாவின் தேகசுகம் சமம், தொழில் ஸ்தானத்தில் சக உத்தியோகஸ்தர்களுடைய ஆதரவு கிட்டும், மாணவர்களுக்குச் சிறந்த வாரம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### துலாராசி

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவுடன், புதிய ஆடை அணிவதில் மகிழ்ச்சி, எடுத்த முயற்சி வெற்றி ஆகிய நற்பலனுடன் காணப்படாலும் மனப்பயம், சந்தேகம், சிறிது நோயும், பிரயாணத் தடையும் வார இறுதியில் காணப்படும். மாதாவின் தேகசுகம் நன்று, புத்திரர் சுகக்குறைவு, விவாகப்பேச்சு தாமதமடையும், கணவன் மனைவி மகிழ்ச்சி, பிதாவின் தேகசுபம் நன்று, தொழில் ஸ்தானத்தில் எதிரிகள் மறைமுகமாக காணப்படுவர், மாணவர்களுக்கு சிறந்த வாரமல்ல, வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### விருச்சிகராசி

**விசாகம் 4ஆம் பாதம் அனுஷம், கேட்டை**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் அறுசுவையுண்டி கவர்ச்சிகரமான ஆடை சிறந்த படுக்கையுடன் மகிழும் வாரமாக ஆரம்பித்து, பண வரவு, எடுத்த காரியம் வெற்றி, நண்பர்கள் உறவு, சமூகத்தில் உயர்ந்த நிலை, சமய அறிஞர்களின் உறவு முதலிய பலன்களுடன் மாதாவிற்கு தேகசுகக் குறைவு, புத்திரர் சுகம், விவாகப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி சமநிலை, பிதாவின் தேகசுகம் நன்று, தொழில் ஸ்தானத்தில் சமமான பலன், மாணவர்களுக்கு சிறந்த வாரம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### தனுராசி

**மூலம், பூராடம், உத்தராடம், 1ஆம் பாதம்.**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இந்த வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாக காணப்படுகின்றது. வரவுக்கு மிஞ்சிய செலவு, கர்வ நிலையினால் பின் கவலைப்படுதல், அறுசுவையுண்டி ஆடையாபரண மகிழ்ச்சி, மாதா தேகசுகம் நன்று, புத்திரர் சுகம், விவாகப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன், மனைவி மகிழ்ச்சி, பிதா தேக சுகக்குறைவு, வைத்தியச் செலவு, தொழில் முன்னேற்றத்தில் சமநிலை, மாணவர்களுக்கு சிறந்தவாரம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம்.

### மகரராசி

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு, நண்பர்கள் உறவு வலுத்தல், தேவையற்ற செலவு, உடை, உணவினால் கர்வமடைதல், உடல் பலவீனம் ஆகிய பலன்களுடன் மாதாவின் தேக சுகம் நன்று, புத்திரர் சுகக் குறைவு.

விவாகப்பேச்சுக்கள் தாமதமடையும், கணவன் மனைவி அமைதி நிலை, பிதாவின் சுகம் நன்றல்ல, தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர்களுக்கு சிறந்த வாரம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மை மிகுந்தவாரமாகவே காணப்படுகின்றது. எடுத்த காரியம் வெற்றி, பொருள் வரவு, தேக சுகநன்று, மனமகிழ்ச்சி, பொதுஜன உதவி முதலிய நற்பலன்களுடன் மாதா சுகயீனம்.

புத்திரர் சுகம், விவாகப்பேச்சு முன்னேற்றமடைதல், கணவன், மனைவி உறவு அமைதி யாகக் காணப்படும், பிதா தேக சுகம் நன்று, தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களின் ஆதரவு, மாணவர்களுக்கு அமைதியான வாரம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### மீனராசி

**பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி**

இந்த இராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நற்பலன் குறைந்த வாரமாக தென்படுகிறது. வயிற்றுரோகம், கண்ணில் நோய் ஏற்படுதல், தேக சுகக் குறைவு, மனப்பயம், எடுத்த காரியம் வெற்றி, பணவரவு, தன்னை மறந்தநிலையில் செலவு ஆகிய பலன்களுடன் மாதா சுகம், புத்திரர் சுகம்.

விவாகப்பேச்சு முன்னேற்றம், கணவன், மனைவி இயன்றளவு மௌனத்தைக் கடைப்பிடிப்பது நன்று, பிதாவின் தேக சுகம் நன்று, தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்கள் மத்தியிலும் சிறப்பாக பணியாற்ற முடியும், மாணவர்கள் கல்வியில் ஊக்கம் வேண்டும்,வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்ணிவெடி உடன்படிக்கை அரசாங்கம் கைச்சாத்திடுமாம்

(கொழும்பு)

நிலக்கண்ணிவெடிக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திட அரசு முடிவு செய்துள்ளதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

டிசெம்பரில் கனடா, ஒட்டாவா நகரில் நடைபெறவுள்ள நிலக் கண்ணிவெடிகளுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளும் அரசு தரப்புப் பிரதிநிதி இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாகவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

இந்த உடன்பாட்டில் கைச்சாத்திடுவது தொடர்பாக அரசாங்கம், விடுதலைப் புலிகளுடனும் விரைவில் கலந்தாலோசிக்கவுள்ளதாக அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## மாலதியின் நினைவுத் தூபி கோப்பாயில் திறப்பு

இரண்டாவது லெப்டினன்ட் மாலதியின் நினைவுத் தூபி நேற்றுக் காலை 9.30 மணியளவில் கோப்பாயில் இந்திய இராணுவத்துடன் நடந்த மோதலில் உயிரிழந்த இடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஈகச்சுடரை யாழ். மாவட்ட மகளிர் பொறுப்பாளர் தமிழ்விழி ஏற்றி வைத்தார்.

தூபியினை மாவீரர் மேஜர் கலைமகளின் தாயார் திறந்து வைக்க, திருவுருவப்படத்திற்கு விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான பாப்பா, தமிழ்மறவன், ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கிருஷ்ணராவ், சின்னவன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

## திருமலையில் இன்று ஹர்த்தால்

(திருகோணமலை நிருபர்)

அம்பாறை காஞ்சிரங்குடாவில் நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப் படையினர் மக்கள் மீது தாக்குதல் நடத்தி ஏழு பேரைப் படுகொலை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை மாவட்டத்தில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

## அம்பாறையில் பலியான பொதுமக்கள்

# எரியூட்டப்படும் இடத்தில் நினைவுத் தூபி அமையும்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை எட்டுப்பேர் என்று அரச ஊடகம் ஒன்று உறுதிப்படுத்தியுள்ளது.

இறந்தவர்களின் மரண விசாரணைகள் நிறைவுபெற்றதும் உடல்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று ஒரேஇடத்தில் எரியூட்டப்படும் என்றும் அறியவருகிறது. அத்துடன், அவ்விடத்தில் ஒரு நினைவுத் தூபியும் அமைக்கப்படவுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஐவர் மாணவர்களாவர்.

விநாயகபுரத்தைச் சேர்ந்த அரசரட்ணம் செல்வக்குமார் (வயது 18), நாகராஜா சசிக்குமார் (வயது 15), கதிரமலை ரவிக்குமார் (வயது 16), ஆகியோரும் திருக்கோவிலைச் சேர்ந்த மனோகரன் சத்தியநாதன் (வயது 18), தம்பிலுவிலைச் சேர்ந்த மகேந்திர மூர்த்தி சசிக்குமார்(வயது 17) ஆகியோரும் மாணவர்களாவர்.

இரண்டு மாதங்களின் முன்னராக குற்றவாளியல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் களுத்துறைச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த திருக்கோவிலைச் சேர்ந்த ஜெயராஜா ஜெயபிரகாஷ் (வயது 19) மற்றும் குமாரகுலசிங்கம் (வயது38) என்ற குடும்பஸ்தரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். மற்றொருவரின் விபரம் இச்செய்தி எழுதப்படும் வரை கிடைக்கப் பெறவில்லை.

# நாளை வட-கிழக்கில்...

அதிரடிப்படையினர் மேற்கொண்ட இக்கொடூரமான கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கையானது பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் எதிர்கால சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக பல ஐயப்பாடுகளையும் அவர்கள் மனதில் தோற்றுவித்துள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக போரின் கொடுமைகளையும், பல்வேறு அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறைகளையும் எதிர்கொண்டுள்ள வடக்குக் கிழக்கிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் தற்போதைய சமாதான சூழலில் தமது உரிமைகளை ஜனநாயக ரீதியில் வென்றெடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற வெகுஜனப் போராட்டங்களை இராணுவப் பலங்கொண்டு அடக்கமுற்படுவதானது தற்போதைய அமைதி முயற்சியில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும், எதிர்பார்ப்புக்களையும் கேள்விக்குரியதாக்கிவிடும்.

விடுதலைப் புலிகளினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்திவரும் வடக்குக் கிழக்கிலே வாழ்கின்ற தமிழ் மக்கள்மீது சிறிலங்காப் படையினர் மோசமான படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையானது இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வைக் காணும் சமாதான நடவடிக்கைகளை திட்டமிட்டு குழப்பும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடமுனைந்துள்ளனரோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறையில் இடம்பெற்ற தமிழ் மக்கள் படுகொலைகள் காரணமாக வடக்கு - கிழக்கில் வாழும் முழுத் தமிழ் மக்களுமே கோபத்திற்கும் மனக் கொந்தளிப்புக்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

எனவே இப்படுகொலையில் ஈடுபட்ட படையினர்மீது ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசானது உடனடியாக நடவடிக்கையை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு தமிழ் மக்கள் தற்போதைய சமாதான முயற்சிகளில் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வைப்பதற்கு விரைவான காத்திரமான நடவடிக்கைகள் அவசியம் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் ஜனநாயக ரீதியில் தமது உரிமைகளுக்காகக் குரல்கொடுத்த அப்பாவித் தமிழ்மக்கள்மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அநியாயமாகப் பல உயிர்களைக் கொன்றொழித்தும் பலரைப் படுகாயங்களுக்கும் உள்ளாக்கிய சிறிலங்கா அதிரடிப்படையினரின் மிலேச்சத்தனமான நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இந்த ஜனநாயக ரீதியிலான வெகுஜனப் போராட்டத்தில் உயிர்களை நீத்த மக்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு நாளை சனிக்கிழமையினை வடக்கு - கிழக்கு முழுவதும் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் தனது துணைவியுடன் நிகழ்வைப் பார்வையிடுவதை முதலாவது படத்திலும் புலிகளின் மகளிர் படையணிகளின் அணிவகுப்பை தொடர்ந்துவரும் படங்களிலும் காணலாம்.

# பல்லாயிரம்...

அமைந்தது.

நேற்று மாலை சரியாக 3.30 மணியளவில் கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியிலிருந்து மேற்படி நிகழ்விற்கான அணிவகுப்புகளும் ஊர்திகள் பவனியும் எழுச்சி ஊர்வலமும் ஆரம்பமாகின. புலிகளின் பெண்கள் படையணிகள் சிறப்புற அணிவகுத்துச் சென்றன. சோதியாப் படையணி, சிறுத்தைப் படையணி, கடற்புலிகளின் மகளிர் படையணி குட்டிசிறி மோட்டார் படையணி, மாலதி படையணி, பயிற்சி ஆசிரியர் படையணி, தமிழீழ தேசிய துணைப்படையணி, பொன்னம்மான் கண்ணிவெடி அகற்றும் படையணி, அன்பரசி படையணி, காவற்துறை பரிசோதகர் படையணி, கிட்டுப் பீரங்கிப் படையணி ஆகியவை தத்தமக்குரிய சீருடைகளில் அணிவகுத்துச் சென்றன.

இதனைத் தொடர்ந்து 2ம் லெப்டினன்ட் மாலதியின் உருவப்படம் தாங்கிய ஊர்தி நகர்ந்து சென்றது. தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டி வீதியை நிறைத்தபடி சென்று கொண்டிருந்தனர். சனத்திரளின் இடையிடையே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மகளிர் படையணிகளின் தீரச்செயல்களை சித்தரிக்கும் வகையிலான ஊர்திகள் நகர்ந்து கொண்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது. இத்தனை படையணிகளும் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கை சென்றடைந்ததும் அங்கு அனைத்து படையணிகளினதும் அணிவகுப்பு இடம்பெற்றது. மைதானத்தின் ஒருபக்கத்தில் தமிழீழ தேசியப் படத்தை பின்னணியாகக் கொண்ட அரங்கில் மகளிர் படையணிகளின் தளபதிகளான கேணல் விதுஷா, கேணல் துர்க்கா லெப்.கேணல் ஆண்டாள், லெப்.கேணல் விடுதலை, லெப்.கேணல் பவநிதி, லெப்.கேணல் தமிழ்ச்செல்வி லெப்.கேணல் அஜந்தி, லெப் கேணல கோதை, லெப்.கேணல் அஸ்வினி லெப்.கேணல் காவேரி, லெப் கேணல் சப்தகி, லெப்.கேணல் இமாக்குலேற் ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

மைதானத்தின் அனைத்துப் பகுதிகளும் சிவப்பு மஞ்சள் கொடிகளாலும் அலங்கார மின்குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டு எழுச்சிபூர்வமாக காட்சியளித்தது. அத்துடன் தமிழீழ தேசியக் கொடியும் அதன் இரு பக்கங்களிலும் படையணிகளின் கொடிகளும் காற்றில் அசைந்த வண்ணம் இருந்தன. அத்துடன் வானத்தில் தொடர்ச்சியாக புகைக்கூண்டுகள் பறக்கவிடப்பட்டன.

எழுச்சிபூர்வமாக அலங்கரிக்கப்பட்ட மேடை ஒன்றில் 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இவ்வுருவப் படத்திற்கு மாலதியின் தந்தையார் மலர் மாலை அணிவித்து ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து மிக வெற்றிகரத் தாக்குதலாக அமைந்த மன்னகுளத் தாக்குதலை நினைவுபடுத்தும் வகையிலான மாதிரித்தாக்குதல் மக்களின் முன் நிகழ்த்தி காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து அஞ்சலி உரைகள் நிகழ்ந்தன. இவற்றை தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்வில் புலிகளின் மூத்த தளபதிகளான பொட்டம்மான், பானு, சொர்ணம், ஜெயம், தீபன், பால்ராஜ், சூசை, சசிக்குமார், கடாபி ஆகியோர் உட்பட புலிகளின் முக்கிய தளபதிகளும் கலந்துகொண்டனர்.

(க,லி,த)

## முகாம்களுக்குள்.....

இது சம்பந்தமான அறிக்கைகளைச் சமர்ப்பித்து எதிர்காலத்தில் இதுபோன்ற அனர்த்தங்கள் நிகழாமல் இருப்பதற்கான வழிசெய்யுமாறு தாம் வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி சுயாதீன விசாரணைக்குழுவானது ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஆகிய மூவரைக் கொண்டமையும் எனவும்,

சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் விசேட கொடுப்பனவு வழங்கப்படுமென்றும் பிரதமர் ரணில் இச்சந்திப்பில் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உடனிருந்தார்.

## நோர்வே.....

கலந்துரையாடலை மேற்கொள்ளும்.

யாழ். செயலகத்தில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாநகர முதல்வர், பல்வேறு திணைக்களங்களினதும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

இவர்கள் மிகக் குறுகியநேர செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்தவுள்ளனர் என அறியப்படுகிறது.

இந்தச் செய்தியாளர் மாநாடு பதினைந்து தொடக்கம் இருபது நிமிடங்கள்வரை நீடிக்கக்கூடும். நோர்வே குழுவினர் இவ்விஜயத்தின்போது யாழ்.ஆயர், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர். பின்னர் இக்குழுவினர் மாலையில் தரை வழியூடாகக் கிளிநொச்சி செல்வர்.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.01 | 96.48 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.93 | 151.24 |
| 1யூரோ | 94.67 | 95.69 |
| 1சுவிஸ் பிராங் | 64.65 | 65.45 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 52.43 | 53.21 |
| 1ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1சவூதி றியால் | 25.67 | 25.67 |

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.